தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

12.04.2013 A.M

**கிணறுகளை சீரமைக்க மானியம் வழங்கக் கோரி தீர்மானம்**

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 91 ஆயிரம் கிணறுகளை பழுதுபார்க்கும் வகையில், விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கக் கோரி, விவசாயிகள் கருத்தரங்கில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திண்டுக்கல் கலைக்கண் அலுவலகத்தில், மாவட்ட விவசாயிகள் சங்கம் சார்பில், விவசாயிகள் சந்திக்கும் பிரச்னைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்த கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, விவசாயிகள் சங்கத்தின் அமைப்புச் செயலர் அ.ச. நிக்கோலஸ் தலைமை வகித்தார். சங்கத்தின் தலைவர் வெ. குழந்தைவேல், பொருளாளர் ம. சந்தியாகப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், சிறுமலை அடிவாரத்தில் கூவனூத்து நொச்சி ஆற்றின் குறுக்கே அணை கட்டி, அந்தப் பகுதியில் உள்ள 10 ஆயிரம் விவசாயிகளை காப்பாற்ற வேண்டும். உரத்துக்கான விலையை குறைக்கும் வகையில் மத்திய அரசு உரத்துக்கு அதிகப்படியான மானியம் வழங்கவேண்டும். மாவட்டத்தில் உள்ள 91 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிணறுகளை பழுது பார்ப்பதற்கு மத்திய-மாநில அரசுகள் மானியம் வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில், தமிழக விவசாய சங்க வரலாறு, திண்டுக்கல் மாவட்ட நீர்வளம், விவசாய முன்னேற்றத்தில் அதிகாரிகளின் பங்கு, கால்நடைப் பராமரிப்பு உள்ளிட்ட தலைப்புகளில் விவசாய சங்க நிர்வாகிகளும், ஓய்வுப்பெற்ற அரசு அதிகாரிகளும் விளக்கம் அளித்தனர்.

இதில், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் கு. வெள்ளைச்சாமி, நிர்வாகிகள் லட்சுமண பெருமாள், செ. பெருமாள்சாமி, சவடமுத்து, ஏ.பி. அழகர்சாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தேனி மாவட்டத்தில் வறட்சி பாதிப்பு: அமைச்சர் குழு ஆய்வு**

தேனி மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள விவசாய பாதிப்புகள் குறித்து, நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர் குழுவினர் வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வறட்சி பாதிப்பு குறித்து முழுமையான கணக்கெடுப்பு நடத்தவும், நிவாரண உதவிகளை விரைவில் வழங்கக் கோரியும் அமைச்சர் குழுவிடம், விவசாயிகள் மனு அளித்தனர்.

தமிழகத்தில் சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அரசு அறிவித்துள்ளது. வறட்சி பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ய நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர் குழுவை முதல்வர் ஜெயலலிதா அமைத்தார். இக்குழுவினர், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் வியாழக்கிழமை நிதியமைச்சர் தலைமையில், அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், கே.பி. முனுசாமி, வைத்திலிங்கம், தாமோதரன், வெங்கடாச்சலம் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வு செய்தனர்.

ஆண்டிபட்டி வட்டாரம், கண்டமனூர் பகுதியில் வறண்டு காணப்படும் மூல வைகை ஆறு, ஆற்றங்கரையோரத்தில் தரிசாக கிடக்கும் சாகுபடி நிலங்கள் ஆகியவற்றை அமைச்சர் குழுவினர் பார்வையிட்டனர்.

மூல வைகை ஆற்றில் கடந்த 2011 ஆம் ஆண்டு 115 நாள்கள் தண்ணீர்வரத்து இருந்ததாகவும், 2012 ஆம் ஆண்டு போதிய மழையின்றி 57 நாள்கள் மட்டும் தண்ணீர் வரத்து இருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

2011 ஆம் ஆண்டு மாவட்டத்தில் மொத்தம் 829.9 மி.மீ., மழை பெய்திருந்ததாகவும், 2012 ஆம் ஆண்டு 397.8 மி.மீ., மழை பெய்துள்ளதாகவும் அமைச்சர்களிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தேனி ஒன்றியம், ஜங்கால்பட்டி, பூமலைக்குண்டு ஆகிய பகுதிகளில் 141 ஹெக்டேர் பரப்பளவில் வறட்சி பாதிப்புக்கு உள்ளான பருத்தி சாகுபடி நிலங்களை அமைச்சர்கள் பார்வையிட்டனர். அங்கிருந்த விவசாயி ரெங்கம்மாளை அழைத்து பருத்தி சாகுபடி குறித்து கேட்டதற்கு, ரூ. 60 ஆயிரம் செலவு செய்து 3 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்திருந்ததாகவும், நீரின்றி பயிர்கள் கருகியதில் மொத்தம் 20 கிலோ பருத்தி மட்டும் அறுவடை செய்துள்ளதாகவும் அமைச்சர்களிடம் அவர் கூறினார்.

கீழபூலானந்தபுரத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட வாழைத் தோட்டம், பெரியகுளம் வட்டாரம் தேவதானப்பட்டியில் வறட்சி மற்றும் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட தென்னந் தோப்பு ஆகியவற்றை அமைச்சர்கள் பார்வையிட்டனர்.

ஜங்கால்பட்டியில், விவசாயிகளின் பயிர் கடனை ரத்து செய்யவேண்டும். வறட்சி நிவாரண உதவிகளை விரைவில் வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை, மாவட்ட விசாயிகள் சங்கத் தலைவர் பாண்டியன் தலைமையில் விவசாயிகள், அமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்திடம் அளித்தனர்.

தேனியில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் டி. கண்ணன் தலைமையில், வறட்சி பாதிப்புகள் குறித்து கிராம நிர்வாக அதிகாரிகள் மற்றும் விவசாயத் துறை அதிகாரிகள் முறையாக களஆய்வு செய்து பாதிப்பு குறித்து அரசுக்கு அறிக்கை அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, அமைச்சர் குழுவிடம் மனு அளிக்கப்பட்டது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில்

வறட்சி பாதித்த பகுதிகளை ஆய்வு செய்வதற்கு உயர்நிலைக் குழுவை அமைத்து முதல்வர் உத்தரவிட்டுள்ளதாக, விவசாயிகளிடம் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் கூறினார்.

இந்த ஆய்வின்போது, வருவாய்த் துறை ஆணையர் ஸ்ரீதர், வருவாய்த் துறை முதன்மைச் செயலர் ராஜீவ் ரஞ்சன், வேளாண்மைத் துறைச் செயலர் சந்தீப் சக்சேனா, ஊரக வளர்ச்சித் துறை செயலர் சி.வி. சங்கர், மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. விஜயாராணி, ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் முருகேசன், வேளாண்மை துணை இயக்குநர் சுந்தரம், தோட்டக்கலை இணை இயக்குநர் முருகன், வருவாய் கோட்டாட்சியர்கள்

கண்ணன், பரமசிவம், ஆண்டிபட்டி எம்.எல்.ஏ., தங்க.தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.10, சென்னையில் ரூ.3.10.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.69, முட்டைக்கோழி கிலோ ரூ.57.

**உழவர் பெருவிழா -2013 முன்னேற்பாடு குறித்த சிறப்புக் கூட்டம்**

கரூர் மாவட்டத்தில் உழவர் பெருவிழா நடத்துவது தொடர்பான சிறப்பு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக்தில் அண்மையில் நடைபெற்றது.

கரூர் மாவட்டத்திலுள்ள 203 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா ஏப். 14-ம் தேதி தொடங்கப்பட்டு ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நீங்கலாக மற்ற அனைத்து நாள்களிலும் மே 17-ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

உழவர் பெருவிழா நடைபெறும் வருவாய் கிராமங்களில் வேளாண்மை மற்றும் சகோதரத் துறைகள் மூலம் சிறு கண்காட்சிகள் அமைக்கப்படும். மேலும், தொழில்நுட்பக் கருத்து செயல்விளக்கங்கள், இடுபொருள்கள் விநியோகம் ஆகியவையும் உழவர் பெருவிழாவில் இடம்பெறும். வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில் சம்பந்தமான கலைநிகழ்ச்சிகளும் தினந்தோறும் நடத்தப்படும். இதுகுறித்து வேளாண்மை மற்றும் வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கான சிறப்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகித்தார். இதில் வட்டார வாரியாக பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். கண்காட்சி நடத்துதல், இடுபொருள்கள் வழங்குதல், பயனாளிகள் தேர்வு செய்தல் ஆகியவை சம்பந்தமாக அறிவுரை வழங்கப்பட்டன.

இதையடுத்து புதன்கிழமை கரூர் மண்டல அலுவலரான சென்னையைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்திய பிரதா சாகு, கரூர் மாவட்ட உழவர் பெருவிழா முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வு நடத்தினார்.

ஆய்வின்போது, கரூர் மாவட்டத்தில் உழவர் பெருவிழா சிறப்பாக நடத்த மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி எடுத்து கூறினார்.

கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு. தெய்வேந்திரன் உழவர் பெருவிழாவை நடத்துவதற்குரிய வழிமுறைகள் போன்றவற்றை அனத்துத் துறை அலுவலர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

**விளைச்சலை அதிகரிக்க நடவடிக்கை தேவை**

அரசு வேளாண் துறையில் உள்ள திட்டங்களை பயன்படுத்தி அதற்கேற்ப விளைச்சலை அதிகரிக்க வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன்.

ஆலங்குடி அருகேயுள்ள குழந்தைவினாயகர்கோட்டையில் புதன்கிழமை நடைபெற்ற மக்கள் குறைகேட்பு முகாமில் 570 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் மேலும் பேசியது: புதுக்கோட்டை மாவட்டத்தில் உயர்கல்வி பயிலும் 18 ஆயிரத்து 20 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது. 17 ஆயிரம் பேருக்கு கறவை மாடுகளும், 7 ஆயிரத்து 423 பேருக்கு ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 17 ஆயிரத்து 317 பேருக்கு விலையில்லா சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வூராட்சியில் குடிநீர் பற்றாக்குறையை போக்க தேவைக்கேற்ப குடிநீர்த் தொட்டி அமைக்கவும், பழுதடைந்த மின்மாற்றிகளை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். விளைச்சலை அதிகரிக்க வேளாண் துறையில் ஏராளமான திட்டங்கள் உள்ளன. அதை உரிய அலுவலர்களிடம் விவசாயிகள் அணுகி அதற்கேற்ப சாகுபடி பணியை மேற்கொண்டால் குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெறலாம் என்றார். முகாமுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நாகராஜன், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.சி. ராமையா, ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரைதனசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஊராட்சித் தலைவர் எஸ். மோகன் மற்றும் ஆலங்குடி வருவாய்த்துறையினர் செய்தனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 25.97 அடி**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 25.97 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப பயிற்சி**

கோவில்பட்டி கோட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் அட்மா வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஓட்டப்பிடாரம் வட்டார பகுதி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது.

குறுக்குச்சாலை ஸ்காட் அலுவலகத்தில் நடைபெற்ற இப்பயிற்சியில் வேளாண் வணிகத் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து கோட்ட வேளாண்மை அலுவலர் பொன்னுராஜ் பேசினார். வாகைகுளம் ஸ்காட் வேளாண்மை அறிவியல் மைய திட்ட அலுவலர் சீனிவாசன், கோவில்பட்டி மண் பரிசோதனை கூட வேளாண்மை அலுவலர் மனோகரன், வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் முருகன், உதவி வேளாண்மை அலுவலர் பாஸ்கரன், உதவி வேளாண்மை அலுவலர் சிக்கந்தர் ஆகியோர் பேசினார்.

**வேளாண்மை அலுவலர் பொன்னுராஜ் வரவேற்றார். கயத்தாறு வட்டார உதவி வேளாண் அலுவலர் ரேவதி நன்றி கூறினார்.**

"உயர்நிலைக் குழு விவசாயிகளை சந்திக்கவில்லை'

திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளை பார்வையிட்ட உயர்நிலைக் குழுவினர் விவசாயிகளைச் சந்தித்து குறைகளைக் கேட்டறியவில்லை என மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் மாவட்டச் செயலர் கே.ஜி. பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தின் 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக தமிழக அரசு ஏற்கெனவே

அறிவித்திருந்தது. இது குறித்து நேரில் ஆய்வு செய்ய உயர்நிலைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. சில வாரங்களுக்கு முன்பாக தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களை அக் குழுவினர் ஆய்வு செய்தனர். அப்போது குழுவினர் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வரவில்லை. இந்நிலையில் வியாழக்கிழமை ஆய்வுக் குழு வருவதாக காலையில் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைக் கொண்டு தான் விவசாயிகள் தெரிந்து கொண்டனர். உயர்நிலைக் குழு வருகை குறித்து முன்கூட்டியே எந்தவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

இதையடுத்து வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, இப்போது போனால் மானூரில் குழுவைச் சந்திக்கலாம் என்றார். உயர்நிலைக்குழு மானூர், தேவர்குளம், விஜயரங்கபுரம் ஆகிய மூன்று இடங்களில் சில மணித் துளிகள் மட்டுமே பார்வையிட்டு சென்றுவிட்டனர்.

வெள்ளப்பனேரியில் தற்கொலை செய்து இறந்துபோன விவசாயி செந்தூர்பாண்டியனின் மனைவி உயர்நிலைக் குழுவை சந்திக்க முயன்றும் முடியவில்லை. திருநெல்வேலி மற்றும் தேனி மாவட்டங்களை உயர்நிலைக் குழு ஒரே நாளில் ஆய்வு செய்வதென எடுத்த முடிவு காரணமாகவே ஆய்வு முழுமையற்று அவசரகதியில் நடந்து முடிந்துள்ளது.

விவசாயம் பாதித்து சில மாதங்களுக்கு பின்பே குழு வந்துள்ளது. அதுவும் மிகவும் பாதிக்கப்பட்ட குருவிகுளம் ஒன்றியப் பகுதியை பார்வையிடாமல் சென்றுள்ளது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

திருநெல்வேலி மாவட்டம் வறட்சியால் மிக கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்று. விவசாயிகளுக்கு எவ்வித நிவாரணமும் இதுவரை முழுமையாக கிடைக்காத நிலை.

இந்நிலையில் மாநில உயர்நிலைக் குழு மாவட்டம் முழுவதும் பல பகுதிகளுக்கும் சென்று விவசாயிகளை நேரில் விசாரித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்றார் அவர்.

**கறவை மாடுகளை தேர்வு செய்வது எப்படி?**



நாமக்கல்: பால் பண்ணைத் தொழில் மீதான ஆர்வம் விவசாயிகள் மட்டுமன்றி, பலதரப்பட்ட மக்களிடமும் அதிகரித்து வருகிறது. அதனால், பால் பண்ணைகள் அமைத்து லாபகரமாக நடத்திட தரமான பசுக்களைத் தேர்வு செய்து வளர்ப்பது அவசியமாகும்.

தரமான பசுக்களைத் தேர்வு செய்வது குறித்து, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மைத் துறை இணைப் பேராசிரியர் த.ஆனந்த பிரகாஷ்சிங் கூறியது:

ஒரு தனிப்பட்ட பசுவின் உற்பத்தித் திறனை பாரம்பரிய உற்பத்தித் திறன், தனி மாட்டின் உற்பத்தித் திறன், சந்ததியரின் குணாதிசயங்கள் ஆகிய மூன்று காரணிகளால் அறிய முடியும். இருப்பினும், இந்த மூன்று அளவுகோல்களும் எப்போதும் கிடைப்பதில்லை. அத்தகைய சமயங்களில் பசுவின் தோற்றத்தைக் கொண்டு, அதன் குணாதிசயம் எப்படி இருக்கும் என்பதை அனுமானிக்கலாம்.

பால் பண்ணைத் தொழிலுக்கு பண்ணைகளில் பராமரிக்கப்படும் பசுக்கள் தரம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும். கறவை மாடுகளை வாங்கும்போது கலப்பின மாடாகவும் (ஜெர்ஸி அல்லது ப்ரிசியன் கலப்பினம்), முதல் ஈத்து மாடாக அல்லது இரண்டாவது ஈத்துக்குத் தாண்டாத மாடாகவும் இருக்க வேண்டும்.

பால் மாடுகளில் உற்பத்தித் திறன் இரண்டாவது ஈத்தில் இருந்து 4ஆவது ஈத்து வரை அதிகரிக்கும். அதன்பிறகு, பாலின் அளவு குறையக்கூடும். எனவே, பால் அதிகம் தரக்கூடிய ஈத்துள்ள 2 முதல் 4ஆவது ஈத்தில் உள்ள மாடுகள் பண்ணையில் இருப்பது அவசியம். தவிர, மாடுகள் 5, 6 ஈத்துக்களைத் தாண்டும் போது, 8 முதல் 10 வயதைக் கடந்திருக்கும் என்பதால், அவற்றைப் பராமரிப்பது லாபகரமானதாக இருக்காது.

மாடுகளை கன்று போட்ட 10 முதல் 15 நாள்களுக்குள் வாங்கிட வேண்டும். ஒரு மாட்டைத் தேர்ந்தெடுக்கும்போது அதன் கண்கள் பிரகாசமாகவும், மாடுகள் சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும். வெளி உறுப்புகளிலிருந்து எந்தவித திரவம், சீழ் வரக் கூடாது. காயங்கள், புண்கள் போன்றவை இருக்கக் கூடாது. கால்கள் நன்றாக அமைந்து வலுவாக இருக்கவும், மாடு அசை போட்டுக் கொண்டு இருக்கவும், மேல் உதடு ஈரமாக வியர்வைகளைக் கொண்டிருக்கவும் வேண்டும்.

பால் மடியானது நன்றாக விரிந்து உடலோடு ஒட்டி இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பாலைக் கறந்தவுடன் சுத்தமாக சுருங்கிட வேண்டும். 4 காம்புகள் இருக்க வேண்டும். அவை சம அளவுகளாகவும், சம இடைவெளிகளுடனும் அமைந்திருக்க வேண்டும். வயிற்றின் அடிப் பகுதியில் பால் மடிக்கு முன் இருக்கும் பால் நரம்புகள் நன்றாகத் தடித்து வளைந்து நல்ல ரத்த ஓட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

பால் மாடுகளின் நெஞ்சுப்பகுதியை விட வயிற்றுப் பகுதி அகன்று இருக்க, கால் முட்டிகளுக்கு இடையே இடைவெளி அதிகமாகவும், வயிற்றுப் பகுதி அகலமாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் நிறைய தீவனத்தை உள்கொண்டு அதிக அளவு பாலை உற்பத்தி செய்யும்.

கறவை மாடுகளை சந்தையில் வாங்குவதைத் தவிர்த்து, மாட்டின் உரிமையாளரின் இடத்துக்கு நேரடியாகச் சென்று மாட்டின் கறவை அளவை தொடர்ந்து மூன்று முறை கறந்து பார்த்து வாங்க வேண்டும். தவிர, மாடு விற்பனையாளரிடம் மாட்டுக்கு இதுவரை தரப்பட்ட தீவனக் கலவை, தீவனம் அளவு குறித்து தெரிந்து கொண்டு, அதே கலவையில் தர வேண்டும். மாடுகளுக்கு தீவனத்தை திடீரென மாற்றக் கூடாது. மாற்றினால் ஜீரண சக்தி இழந்து பால் உற்பத்தி குறையக்கூடும். அதேபோல, மாடுகளுக்கு முறையாகத் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**"கூடுதல் மகசூலுக்கு விதைப் பரிசோதனை அவசியம்'**



கூடுதல் மகசூல் பெறுவதற்கு விதைப் பரிசோதனை அவசியம் செய்து கொள்ள வேண்டும் என விதைப் பரிசோதனைத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து விதைப் பரிசோதனை அலுவலர் கி. எழிலரசு கூறியது:

விதை உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதைப் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒரு விதையின் புறத்தூய்மை, இனத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிற ரக விதை கலப்பு ஆகியவற்றை விதைப் பரிசோதனை மூலம் மிகத் துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.

விதைப் பரிசோதனையின் பயன்கள்: விதைக்குவியலின் திறன் அறிந்து விதையளவு நிர்ணயம் செய்யப்படுகிறது. விதைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதைத் தரங்களைக் கொண்டுள்ளனவா என அறியப்படுகிறது. விதைத் தரம் அறிந்து விதை உபயோகிப்பாளர்களிடம் நல்ல வருவாய் கிடைக்க உறுதி செய்கிறது.

திருச்சி விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிற ரக விதை கலப்பு, விதை நலம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புறத்தூய்மை: ஒவ்வொரு பயிரிலும் குறைந்தபட்ச தரம் இருக்க வேண்டிய அளவுகள் வருமாறு: வெண்டை 99%, கேழ்வரகு, எள் 97%, நிலக்கடலை, பீட்ரூட், முருங்கை 96%, கேரட், கீரை, மல்லி 95%, இதர பயிர்களுக்கு 98% இருக்க வேண்டும்.

முளைப்புத்திறன் சோதனை: முளைப்புத்திறன் என்பது விதையானது உயிரும், வீரியமும் கொண்டு இயங்குவதைக் காட்டுவதாகும். நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைக்குவியலில் இருந்து விதைக்கப்படும் விதை மூலம் நிறைவான பயிர் எண்ணிக்கையில் வயலின் பயிர்கள் செழித்து வளரும். ஆனால், அதேநேரத்தில் முளைப்புத்திறன் குறைந்த விதைகளைப் பயன்படுத்தினால், குறைந்த எண்ணிக்கையிலேயே பயிர்கள் வளரும். இதனால் பயிர் மகசூல் பாதிக்கப்படும்.

குறைந்தபட்ச முளைப்புத்திறனின் தரம் மக்காச்சோளம் 90%, கொண்டைக்கடலை 85%, நெல், கொள்ளு, எள், சணப்பு 80%, சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து, தட்டைப்பயறு,

பாசிப்பயறு, பட்டாணி, அவரை, வீரியப் பருத்தி ஆகியவற்றுக்கு 75%, நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு, சோயாபீன்ஸ், கத்தரி, தக்காளி, கீரை, வெங்காயம், முள்ளங்கி, கொத்தவரை, முருங்கை ஆகியவற்றுக்கு 70%, பருத்தி, வெண்டை, காலிபிளவர், மல்லி ஆகியவற்றுக்கு 65%, பூசணி, பாகல், மிளகாய், புடலை, பீர்க்கு, சுரைக்காய், தர்பூசணி, பப்பாளி ஆகியவற்றுக்கு 60% முளைப்புத்திறனின் தரநிர்ணயமாகும்.

பகுப்பாய்வு: விதை மாதிரிகளுக்கு ஒரு விதை மாதிரிக்கு பகுப்பாய்வுக் கட்டணமாக ரூ. 30 பெறப்படுகிறது. எனவே, விவசாயிகள் விதைப் பரிசோதனை செய்து விதைப்பு செய்தால் கூடுதல் லாபம் பெறலாம் என்றார் அவர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 12.04.2013 A.M

### விவசாயிகளை கவுரவிக்க மாவட்ட நிர்வாகம் முடிவு

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் வரும் 14 முதல் 20ம் தேதி வரை கிராமங்கள் தோறும் உழவர் பெருவிழா நடத்தி விவசாயிகளை கவுரவிப்பது' என மாவட்ட நிர்வாகம் முடிவுசெய்துள்ளது.விவசாயிகள் பயன்பெறும் விதமாக விவசாய விளைபொருட்களின் உற்பத்தியை இருமடங்காக அதிகரித்து பசுமை புரட்சியை ஏற்படுத்தும் விதமாக கிராமங்கள்தோறும் உழவர் பெருவிழா நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இவ்விழா கிராமங்கள்தோறும் வரும் 14ம் தேதி முதல் 20ம் தேதிவரை நடக்கிறது.இதன் துவக்கவிழா குன்றாண்டார்கோவில் பஞ்சாயத்து யூனியனில் வரும் 14ம் தேதி நடக்கிறது. மாவட்ட கலெக்டர் மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவை அமைச்சர் சுப்பிரமணியன் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கவுரவிக்கிறார். எம்.எல்.ஏ.,க்கள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்க உள்ளனர்.

### ஆத்தூரில் கோடை வெயில் அதிகரிப்பு பால் உற்பத்தி கடும் பாதிப்பு

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், வழக்கத்தை விட சுட்டெரிக்கும் கோடை வெயில் அதிகரித்துள்ளதால், பால் உற்பத்தி, பெருமளவில் குறைந்து விட்டது.தமிழகம் முழுவதும் உள்ள, 7,000 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் இருந்து, தினமும், 25 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. அதன்படி, சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலைய கட்டுப்பாட்டில், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, வாழப்பாடி ஒன்றியங்களில், 193 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.இந்த பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில், தினமும் கொள்முதல் செய்யும், 1.40 லட்சம் லிட்டர் பாலை, குளிரூட்டம் செய்து, சேலம், சென்னை ஆவின் நிறுவனத்துக்கு, 14 டேங்கர் லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டு வந்தது.

தற்போது, சேலம், ஆத்தூர் பகுதியில், வழக்கத்தை விட, சுட்டெரிக்கும் வெயில் அதிகரித்துள்ளதால், பால் உற்பத்தி பெருமளவில் குறைந்து விட்டது.மாலை நேரத்தில் கறக்கும் பால், வெயில் தாக்கத்தில் கெட்டு விடும் என்பதால், பால் கேனை, ஈரத் துணியால் போர்த்தி வந்து, கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வந்து, உற்பத்தியாளர்கள் ஊற்றுகின்றனர். தொடர்ந்து, பால் கொள்முதல் நிலையத்தில், உற்பத்தியாளர்களிடம் பெறப்படும் பால் கேன்களில், ஈரச் சாக்கு போட்டு தண்ணீர் ஊற்றி குளிரூட்டம் செய்கின்றனர்.தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்க, மாநில இணைச் செயலாளர் வாசு (எ) ராமகிருஷ்ணன் கூறியதாவது:பருவ மழை பாதிப்பால், தண்ணீர், விளைபொருட்கள் கிடைப்பது சிரமமாக உள்ளது. தீவனத்தின் விலை மூட்டை, 600 முதல், 900 ரூபாயும், புண்ணாக்கு கிலோ, 30 ரூபாயில் இருந்து, 45 ரூபாயும் என, விலை உயர்ந்துள்ளது.கோடை வெயில், வறட்சி காரணமாக, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கறவை மாடுகளை விற்றதால், தினமும், 20 லட்சம் லிட்டராக பால் குறைந்துள்ளது. தமிழக அளவில், பால் உற்பத்தியில், ஆத்தூர் ஒன்றியத்தில் தினமும், 1.40 லட்சம் லிட்டராக இருந்து, தற்போது, 1.08 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் உள்ளது.ஆத்தூர் பகுதியில், 100 டிகிரிக்கு மேல் சுட்டெரிக்கு வெயில் அடித்து வருவதால், 5,000 கறவை மாடுகளை, விவசாயிகள் விற்பனை செய்துள்ளனர். இதேநிலை நீடித்தால், பால் உற்பத்தி கடுமையாக பாதிக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

### தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 310 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 310 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கோழிப் பண்ணையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 300 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 10 காசு உயர்ந்து, 310 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன் எதிரொலியாக பரவலாக முட்டை நுகர் அதிகரித்துள்ளதால், முட்டை விலை ஏற்றமான சூழலில் உள்ளது என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 310, பெங்களூரு, 295, மைசூர், 295, ஹைதராபாத், 274, மும்பை, 309, விஜயவாடா, 287, கொல்கத்தா, 356, பார்வாலா, 262, டில்லி, 272.என இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள்

ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 69 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 310 காசுகளாக நிர்ணயம்

---

நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 310 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 300 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 10 காசு உயர்ந்து, 310 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக பரவலாக முட்டை நுகர்வு அதிகரித்துள்ளதால், முட்டை விலை ஏற்றமான சூழலில் உள்ளது என, கோழி பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:சென்னை, 310 காசு, பெங்களூரு, 295 காசு, மைசூர், 295 காசு, ஹைதராபாத், 274 காசு, மும்பை, 309 காசு, விஜயவாடா, 287 காசு, @கால்கட்டா, 356 காசு, பார்வாலா, 262 காசு, டில்லி, 272 காசு என, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறி கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 69 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 310 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 310 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கோழிப் பண்ணையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 300 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 10 காசு உயர்ந்து, 310 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன் எதிரொலியாக பரவலாக முட்டை நுகர் அதிகரித்துள்ளதால், முட்டை விலை ஏற்றமான சூழலில் உள்ளது என, கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 310, பெங்களூரு, 295, மைசூர், 295, ஹைதராபாத், 274,

மும்பை, 309, விஜயவாடா, 287, கொல்கத்தா, 356, பார்வாலா, 262, டில்லி, 272.என இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 69 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**ஆத்தூரில் கோடை வெயில் அதிகரிப்பு பால் உற்பத்தி கடும் பாதிப்பு**

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், வழக்கத்தை விட சுட்டெரிக்கும் கோடை வெயில் அதிகரித்துள்ளதால், பால் உற்பத்தி, பெருமளவில் குறைந்து விட்டது.தமிழகம் முழுவதும் உள்ள, 7,000 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் இருந்து, தினமும், 25 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. அதன்படி, சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலைய கட்டுப்பாட்டில், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, வாழப்பாடி ஒன்றியங்களில், 193 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.இந்த பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில், தினமும் கொள்முதல் செய்யும், 1.40 லட்சம் லிட்டர் பாலை, குளிரூட்டம் செய்து, சேலம், சென்னை ஆவின் நிறுவனத்துக்கு, 14 டேங்கர் லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. தற்போது, சேலம், ஆத்தூர் பகுதியில், வழக்கத்தை விட, சுட்டெரிக்கும் வெயில் அதிகரித்துள்ளதால், பால் உற்பத்தி பெருமளவில் குறைந்து விட்டது.மாலை நேரத்தில் கறக்கும் பால், வெயில் தாக்கத்தில் கெட்டு விடும் என்பதால், பால் கேனை, ஈரத் துணியால் போர்த்தி வந்து, கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வந்து, உற்பத்தியாளர்கள் ஊற்றுகின்றனர். தொடர்ந்து, பால் கொள்முதல் நிலையத்தில், உற்பத்தியாளர்களிடம் பெறப்படும் பால் கேன்களில், ஈரச் சாக்கு போட்டு தண்ணீர் ஊற்றி குளிரூட்டம் செய்கின்றனர்.தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்க, மாநில இணைச் செயலாளர் வாசு (எ) ராமகிருஷ்ணன் கூறியதாவது:பருவ மழை பாதிப்பால், தண்ணீர், விளைபொருட்கள் கிடைப்பது சிரமமாக உள்ளது. தீவனத்தின் விலை மூட்டை, 600 முதல், 900 ரூபாயும், புண்ணாக்கு கிலோ, 30 ரூபாயில் இருந்து, 45 ரூபாயும் என, விலை உயர்ந்துள்ளது.கோடை வெயில், வறட்சி காரணமாக, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கறவை மாடுகளை விற்றதால், தினமும், 20 லட்சம் லிட்டராக பால் குறைந்துள்ளது. தமிழக அளவில், பால் உற்பத்தியில், ஆத்தூர் ஒன்றியத்தில் தினமும், 1.40 லட்சம் லிட்டராக இருந்து, தற்போது, 1.08 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் உள்ளது.ஆத்தூர் பகுதியில்,

100 டிகிரிக்கு மேல் சுட்டெரிக்கு வெயில் அடித்து வருவதால், 5,000 கறவை மாடுகளை, விவசாயிகள் விற்பனை செய்துள்ளனர். இதேநிலை நீடித்தால், பால் உற்பத்தி கடுமையாக பாதிக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

**வாழப்பாடி கூட்டுறவு சங்கத்தில் ரூ.1.40 கோடிக்கு பருத்தி ஏலம்**

சேலம்: வாழப்பாடி வேளாண் கூட்டுறவு சங்கத்தில். 1.40 கோடி ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது.வாழப்பாடியில், சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் உள்ளது. இங்கு ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது.டிசம்பர் முதல் மே வரை பருத்தி சீஸன் காலமாக இருப்பதால், வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் நடந்த பருத்தி ஏலத்தில், பெரம்பலூர், அரியலூர், பெரிய கிருஷ்ணாபுரம், சின்ன கிருஷ்ணாபுரம், வாழப்பாடி, குறிச்சி, பெத்தநாயக்கன் பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து, 600க்கும் மேற்பட்ட விவசாயிகள் பருத்திகளை கொண்டு வந்தனர். அன்னூர், கொங்கனாபுரம், தேனி, சேலம், ஆத்தூர், மகுடஞ்சாவடி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் பருத்தியை வாங்கி சென்றனர்.ஏலத்தில், 7,000 மூட்டை பருத்தி விற்பனையானது. டி.சி.எச். ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 5,716 ரூபாய், குறைந்தபட்சமாக, 5,481 ரூபாய்க்கு விற்பனையானது. ஆர்.சி.எச். பருத்தி ரகம் அதிகபட்சமாக, 5,119 ரூபாய், குறைந்தபட்சமாக, 4,889 ரூபாய்க்கு விற்பனையானது. ஒரு நாளில், 1.40 கோடி ரூபாய்க்கு பருத்தி விற்பனை நடந்தது.

**கார்பைடு மூலம் வாழைப்பழத்தை பழுக்க வைப்பதாக புகார்: ஆத்தூரில் அதிகாரிகள் சோதனை**

ஆத்தூர்: ஆத்தூரில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர். ஆத்தூர் நகராட்சியில் வாழைக்காய்களை கார்பைடு வைத்து பழுக்க வைத்து விற்பதாக புகார் எழுந்தது. இதையடுத்து 25-வது வார்டு பகுதியில் வாழைப்பழ கடைகளில் மாவட்ட அதிகாரி அனுராதா தலைமையில் அதிகாரிகள் சோதனை நடத்தின்.

**சவுக்கு பாத்தியில் ஊடுபயிராக கேழ்வரகு சாகுபடி**

காஞ்சிபுரம்:வெங்கச்சேரி கிராம விவசாயி, சவுக்கு பாத்தியில், ஊடுபயிராக கேழ்வரகு சாகுபடி செய்து வருகிறார்.காஞ்சிபுரம் - உத்திரமேரூர் சாலையில் அமைந்துள்ளது, வெங்கச்சேரி கிராமம். இங்குள்ள, விளை நிலங்கள், மணல் பூமியாக உள்ளதால், எந்த பயிரை சாகுபடி செய்தாலும், நல்ல விளைச்சலை கொடுக்கின்றன. இதனால், இங்குள்ள விவசாயிகள் நெல், கரும்பு, சவுக்கு, வேர்க்கடலை மற்றும் தோட்டக்கலை பயிர்களான கத்தரிக்காய், வெண்டை, கீரை, ஆகியவற்றை,

சாகுபடி செய்து வருகின்றனர்.

ஊடு பயிர்:பயிர்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்த, விவசாயிகள் ஆயிரக்கணக்கான ரூபாயை செலவழிக்க வேண்டியுள்ளதால், அதிக லாபம் பெற முடியாத நிலை உள்ளது. இதை தவிர்க்க, பெரும்பாலான விசாயிகள், சவுக்கு பயிரை சாகுபடி செய்ய துவங்கி விட்டனர். ஐந்தாண்டு பயிரான சவுக்கு, ஊட்டமாக வளர்ந்து நல்ல லாபத்தை கொடுக்கிறது. குறைந்த செலவு மற்றும் நீர் பாசனத்தில், சாகுபடி செய்யப்படும் சவுக்கு பயிரில், ஊடு பயிராக, கேழ்வரகு பயிரிடுகின்றனர்.

லாபம் தரும்:இதுகுறித்து, வெங்கச்சேரியை சேர்ந்த விவசாயி கோபால்சிங் கூறியதாவது:கடந்த, 10 ஆண்டுகளாக, கடும் வறட்சி நிலவுவதால், குறைந்த தண்ணீரில் விளையும் பயிர்களை கண்டறிந்து, அதனை சாகுபடி செய்து வருகிறோம். அந்த வகையில், சவுக்கு தேர்வு செய்து பயிரிட்டுள்ளேன்.இதில், ஊடு பயிராக கேழ்வரகு நடவு செய்தேன். கேழ்வரகு நல்ல விளைச்சலை கொடுத்து, அறுவடைக்கு தயாராகி உள்ளது. மூன்று மாதத்தில், 1 ஏக்கருக்கு, 25,000 முதல் 35,000 ரூபாய் வரை லாபம் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறேன். ஊடு பயிரால், சவுக்கு எந்த வகையிலும் பாதிக்கப்படாது.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**மலர்ந்தும் "மலராத' மலர்கள் : அன்று ரூ.16: இன்றைய விலை 50 பைசா**

ஊட்டி : ஊட்டியில், கார்னேஷன், ஜெர்பரா மலர்களின் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில், கார்னேஷன், ஜெர்பரா உட்பட கொய் மலர் சாகுபடியில் ஏராளமான விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மலர்களை விற்பனை செய்ய, மார்க்கெட்டிங் வசதி இல்லாததால், கொய்மலர்

சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், பெரிதும் பாதித்துள்ளனர்.

இதில், பெரும்பாலான விவசாயிகள் ஜெர்பரா மலர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

"கடந்த காலங்களில் ஒரு மலருக்கு 16 ரூபாய் விலை கிடைத்து வந்த நிலையில், நீலகிரி ஜெர்பரா மலர் ஒன்றுக்கு, தற்போது 50 பைசா மட்டுமே கிடைக்கிறது' என, விவசாயிகள் கூறுகின்றனர்.

பதுக்கல் காரணமா?

நீலகிரி கொய்மலர்களுக்கு, பெங்களூருவில் கிராக்கி அதிகம். குறிப்பிட்ட சில காலங்களில் பெங்களூருவில், ஜெர்பரா மலர்கள் அதிகளவில் விற்கப்

படுகின்றன.

"இடைத்தரகர்கள் மூலம், விவசாயிகள் தங்கள் மலர்களை விற்பனை செய்து வரும் நிலையில், சில

இடைத்தரகர்கள் மிகக் குறைந்த விலைக்கு ஜெர்பரா மலர்களை வாங்கி, குளிர்பதன கிடங்களில் பதுக்கி வைத்து கொள்கின்றனர்; அந்த மலர்கள் வாடாமல் இருக்க, ரசாயனம் கலந்த ஒரு "ஸ்ப்ரே' அடிக்கப்படுகிறது' என

விவசாயிகள் கூறுகின்றனர்.

நீலகிரியில், கொய்மலர் சாகுபடியை மேம்படுத்த, சேரிங்கிராஸ் பகுதியில், மலர் ஏற்றுமதி மையம், குளிர்பதன வசதி உட்பட கட்டுமானப் பணிகள் செய்யப்பட்ட போதும், தற்போது அது பயனற்று கிடக்கிறது.

"அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள், சிறப்பான முறையில் தொடர்வதற்கான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட துறையினர் மேற்கொண்டால் தான் இத்தகைய பிரச்னைகளை சமாளிக்க முடியும்; மலர் சாகுபடி பாதிப்பு குறித்து தோட்டக்கலை துறையினர் ஆய்வு நடத்தி தீர்வு காண வேண்டும்' என்பதே மலர் விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

**விவசாயிகளை ஊக்குவிக்க மானியம் தேயிலை வாரிய செயல் இயக்குனர் தகவல்**

குன்னூர் : "தரமான தேயிலையை உற்பத்திக்கு விவசாயிகளை ஊக்குவிக்க, சிறு தேயிலை விவசாயிகளுக்கான மானியங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது' என தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

தேயிலை வாரியம் சார்பில், சிறு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்தாண்டு முதல் எஸ்.சி., எஸ்.டி., பிரிவை சேர்ந்த விவசாயிகளுக்கு பல சலுகைகள் வழங்கப்படுகிறது.

இது குறித்து தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் அம்பலவாணன் கூறுகையில், ""எஸ்.சி.எஸ்.டி., பிரிவு விவசாயிகளுக்கு, தேயிலை தோட்டங்களை பராமரித்து இடுபொருட்கள் வாங்க எக்டருக்கு 4000 ரூபாய் வீதம், 25 ஆயிரம் எக்டருக்கு 97 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் பற்றாக்குறையை போக்க இலை பறிக்கும் இயந்திரம், கவாத்து இயந்திரம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

சிறு தேயிலை விவசாயிகள் தேயிலையின் தரத்தை உயர்த்தும் வகையில், மறுநடவு மற்றும் கவாத்து செய்ய மானியம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மறுநடவுக்கு எக்டருக்கு 3 லட்சத்து 44 ஆயிரத்த 600 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது.

இது தற்போது 4 லட்சத்து 34 ஆயிரத்து 700 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கவாத்து மானியம்

எக்டருக்கு 95 ஆயிரத்திலிருந்து, 1 லட்சத்து 17 ஆயிரத்து 800 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது," என்றார்.

**ரூ.75 ரூபாயாக உச்சத்தை தொட்டது பீன்ஸ் விலை**

ஈரோடு: பீன்ஸ் விலை வரலாறு காணாத அளவுக்கு கிலோ, 75 ரூபாய்க்கு உழவர் சந்தையில் விற்கப்படுகிறது.பீன்ஸ், கேரட், பீட்ரூட், நூல்கோல் போன்ற இங்கிலிஷ் காய்கறிகள் பெருமளவு ஊட்டியில் இருந்து ஈரோடு மார்க்கெட்டுக்கும், உழவர் சந்தைக்கும் வருகிறது. தற்போது நிலவும் கடும் கோடையாலும், ஊட்டியில் தண்ணீர் பற்றாக்குறையால், இங்கிலீஷ் காய்கறி உற்பத்தி கடுமையாக குறைந்துள்ளது.இதனால், சம்பத் நகர் உழவர் சந்தையில் கிலோ, 48.50 ரூபாய் விற்ற பீன்ஸ் அதிகப்பட்சமாக, 75 ரூபாய்க்கு நேற்று விற்கப்பட்டது. வெளிச்சந்தையில், 80, 85 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.இதுபோன்று கேரட் கடந்த வாரம், 30, 32 ரூபாய்க்கு விற்கப்பட்டது, தற்போது, 40, 42 ரூபாய்க்கும், பீட்ரூட், 20, கோஸ், 14, டர்னிப், 28, சவ்சவ், 28 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது.உள்ளூர் காய்கறியில், கத்திரிக்காய் மிக அதிகப்பட்சமாக, 25 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில், 30 ரூபாய்க்கும், வெண்டை, 30 ரூபாய், புடலை, 16, பீர்க்கங்காய், 25, கொத்தவரங்காய், 20, பாகற்காய், 20, வெள்ளை முள்ளங்கி, 17, மிளகாய், 35, சின்ன வெங்காயம், 35, முருங்கை, 13, வெங்காயம், 18 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.வறட்சியால், சின்ன வெங்காயம் உற்பத்தி குறைந்து, விலை அதிகரித்துள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.ஈரோடு உழவர் சந்தைக்கு தினமும் ஒரு டன் பப்பாளி வரத்தாகிறது. தற்போது, ஒன்று முதல், இரண்டு டன் வரை வரத்தாகும். தற்போது மாம்பழ சீசன் துவங்கியதால், 200 கிலோ வரை சம்பத் நகர் உழவர் சந்தைக்கு வரத்தாகிறது. அல்போன்ஸா கிலோ, 60 ரூபாய், செந்தூரா, 20, கிளிமூக்கு, 20 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.சித்திரை கடைசியில் மாம்பழ சீஸன் அதிகமாகும் என்பதால், மேலும் வரத்து அதிகரிக்கும். தவிர, தர்பூசணி ஒரு கிலோ, 10 ரூபாய்க்கும், வெள்ளிரி, 10 ரூபாய், செவ்வாழை ஒரு கி÷ லா, 35 ரூபாய், பூவம்பழம், 25 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.சம்பத் நகர் பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தால் பாஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விவசாயிகளும் இதனால் பாதிக்கப்பட்டனர். தற்போது, 18 பஸ்கள் இயக்கப்படுவதால், விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

உழவர் சந்தையில் கடந்தாண்டைவிட விற்பனை உயர்வு கடந்தாண்டு ஏப்ரல் ஒன்று முதல், 2013 மார்ச், 31 வரை, ஈரோடு மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில், வரத்து அதிகரித்துள்ளது.

அதற்கு முந்தைய ஆண்டைவிட, 10 முதல், 20 சதவீதம் வரத்து உயர்ந்துள்ளது. கடந்தாண்டு விற்பனை விபரம்:

ஈரோடு சம்பத் நகர் 7,900 டன் ரூ.13.30 கோடி 72,988 15.32 லட்சம்

பெரியார் நகர் 2,294 டன் ரூ.3.95 கோடி 21,799 4.59 லட்சம்

கோபி 2,439 டன் ரூ.3.67 கோடி 23,579 4.87 லட்சம்

சத்தி 2,688 டன் ரூ.4.59 கோடி 26,679 4.13 லட்சம்

தாராபுரம் 7,716 டன் ரூ.13.40 கோடி 46,260 9.61 லட்சம்

பெருந்துறை 1,997 டன், ரூ.3.10 கோடி 11,711 3.99 லட்சம்

காங்கேயம் 2,366 டன், ரூ.4.64 கோடி 20,251 4.73 லட்சம்

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

சேரன்மகாதேவி:நான்குநேரியில் நாளை (13ம்தேதி) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது.

இதுகுறித்து சேரன்மகாதேவி சப்-கலெக்டர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

நான்குநேரி வட்டார வளர்ச்சி அலுவலக கூட்ட அரங்கில் வரும் 13ம்தேதி காலை 10 மணியளவில் சேரன்மகாதேவி கோட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், நான்குநேரி மற்றும் ராதாபுரம் கோட்டங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் சேரன்மகாதேவி சப்-கலெக்டர் தலைமையில் நடக்கிறது. கூட்டத்தில் அனைத்து அரசு துறை அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர். எனவே அம்பாசமுத்திரம், நான்குநேரி, ராதாபுரம் வட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**வறட்சியின் பிடியில் நெல்லை மாவட்ட பகுதிகள் வளமையான மழை அளவை விட 70 சதவீதம் குறைவு**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக வளமையான மழை அளவை விட 70 சதவீதம் குறைவான மழை பெய்தது.

நெல்லை மாவட்டத்தில் வளமையான மழை அளவு 814.8 மி.மீ ஆகும். கடந்த ஆண்டு சுமார் 754.20 மி.மீ அளவு மட்டும் மழை பெறப்பட்டுள்து. இது வளமையான மழை அளவை விட 10 சதவீதம் குறைவாகும்.

கடந்த ஆண்டு தென் மேற்கு பருவ மழை வளமையான மழை அளவு 109.50 மி.மீட்டருக்கு 38.98 மி.மீ அளவு மட்டுமே பெறப்பட்டுள்ளது. இது வளமையான மழை அளவை விட 70 சதவீதம் குறைவானதாகும்.

மாவட்டத்தில் குளிர் காலத்தின் வளமையான மழை அளவு 80.4 மி.மீ ஆகும். இதில் கடந்த 2011 ஆண்டு 71.24 மி.மீ, கடந்த ஆண்டு 75.21 மி.மீ மழை பெய்தது. கோடை காலத்தின் வளமையான மழை அளவு 139.1 மி.மீ ஆகும். இதில் 2011ம் ஆண்டு 108.1 மி.மீ, கடந்த ஆண்டு 103.8 மி.மீ மழை பெய்துள்ளது.

தென் மேற்கு பருவ மழை காலத்தில் மொத்த வளமையான மழை அளவு 109.50 மி.மீ ஆகும். இதில் 2011ம் ஆண்டு 123.42 மி.மீ, கடந்த ஆண்டு 38.98 மி.மீ அளவுகளில் மட்டும் மழை பெய்தது.

வட கிழக்கு பருவ மழை காலத்தில் மொத்த வளமையான மழை அளவு 485.8 மி.மீ. இதில் 2011ம் ஆண்டு 662.3 மி.மீ, கடந்த ஆண்டு 536.26 மி.மீ அளவுகளில் மழை பெய்தது.

மாவட்டத்தில் மொத்த வளமையான மழை அளவு 814.80 மி.மீ ஆகும். இதில் 2011ம் ஆண்டு 965.07 மி.மீ மழை பெய்தது. கடந்த ஆண்டில் 754.20 மி.மீ அளவில் மட்டுமே மழை பெய்தது. மாவட்டத்தில் வளமையான மழை அளவில் இருந்து வேறுபாடு -60.597 மி.மீ எனவும், கடந்த ஆண்டு வேறுபாடு -210.867 மி.மீ எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

**விளைச்சலும் இல்லை... போதில விலையும் இல்லை... தென்காசியில் மா விவசாயிகள் கவலை**

தென்காசி:தென்காசி பகுதியில் மா விளைச்சலின்றி விலையுமின்றி காணப்படுவதால் மா விவசாயிகள் பெரும் கவலையடைந்து வருகின்றனர்.

உலகில் மா உற்பத்தியில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. குறிப்பாக தமிழகத்தில் தருமபுரி மாவட்டத்தில் 15 ஆயிரத்து 200 ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. தருமபுரி மாவட்டத்திற்கு அடுத்து தென்மாவட்டங்களில் அதிக அளவில் மா விவசாயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது பங்குனி, சித்திரை மா அறுவடை நேரம் என்பதால் மாந்தோப்புகளில் மூங்கிலுடன் கூடிய கூடை மூலம் மரத்திலிருந்து பறிக்கப்பட்டு தரம் வாரியாக பிரிக்கப்பட்டு வருகிறது.

தரம் வாரியாக பிரித்து காய்களை விற்பனைக்கு கொண்டு செல்லும்போது பிளாஸ்டிக்

கிரேடுகளில் சரியான முறையில் பழங்களை அடுக்கி எடுத்துச் செல்லப்படுகிறது. தரம் குறைந்த காய்களை குடோன்களில் குவித்து வைத்துள்ளனர். பிளாஸ்டிக்கிரேடு மற்றும் மூங்கில் கூடைகள் மூலம் கனரக வாகனங்களில் ஏற்றப்பட்டு வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. 5 முதல் 15 ஆண்டுகள் வயதுடைய மாங்காய் மரங்களில் ஒரு எக்டேருக்கு 7 முதல் 10 டன் மகசூலும், 16 முதல் 20 வயதுடைய மாமரங்களில் 1 எக்டேருக்கு 15முதல் 20 டன் மகசூலும் கடந்த காலங்களில் கிடைத்து வந்தது.

ஆனால் மார்கழி, தை, மாசி மூன்று மாதங்களில் மா பூத்து குலுங்கும் பங்குனி, சித்திரையில் அறுவடை நடக்கும். அமோக விளைச்சல் இருந்தால் வைகாசி மாதம் வரை மாங்காய் பறி நீடிக்கும். கடந்த மாசி மற்றும் பங்குனி மாதங்களில் எதிர்பாராத விதமாக திடீர் மழை பெய்ததால் மா பூக்கள் உதிர்ந்து காய், காய்க்காமல் வறண்ட நிலையில் காணப்படுகிறது. 1 மாதத்திற்கு நல்ல விளைச்சல் இருந்தால் அரை டன் வரை மாங்காய் கிடைக்கும். ஆனால் தற்போது தலா 50 கிலோ கூட மாங்காய் கிடைப்பதில்லை.

இங்கு விளைந்த காய்கள் தற்போது குறைந்த அளவே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதுகுறித்து மா சாகுபடி செய்துள்ள விவசாயி கூறியதாவது:-
எங்களிடம் ஒரு கிலோ மல்கோவா மாங்காய் 25 ரூபாய்க்கு எடுக்கும் மொத்த வியாபாரிகள் அதிக லாபமடைந்து வருகின்றனர். இதில் தோப்பு குத்தகை பணம், மரங்களுக்கு மருந்தடிக்க கூலி, காவலாளி சம்பளம், பறி ஆட்களுக்கு தினசரி கூலி, பறித்து காய்களை ஆட்டோவில் ஏற்றி செல்ல ஆட்டோ கூலி என பல்வேறு செலவுகள் செய்தும் விளைச்சலும் இல்லை, விலையுமில்லை என மா விவசாயிகள் ஆழ்ந்த கவலையுடன் கூறினார்.

**மாவட்ட வறட்சி பகுதியை அமைச்சர்கள் பார்வை! உரிய நிவாரணம் தேவை... விவசாயிகள் குமுறல்**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர்கள் குழுவினர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டது.
நெல்லை மாவட்டத்தில் 2012-13ம் ஆண்டு பிசான பருவத்தில் கடும் வறட்சி ஏற்பட்டு

விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு அரசு ஏற்கனவே நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்துள்ளது. வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நிதி அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் உயர் மட்ட குழு அமைக்கப்பட்டு தமிழகத்தில் பல மாவட்டங்களில் ஆய்வு செய்து வருகிறது. நெல்லை மாவட்டத்திற்கு நிதி அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையிலான உயர் மட்ட குழு நேற்று வந்தது. இக்குழுவில் அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், வெங்கடாசலம், முனுசாமி, வைத்தியலிங்கம், தாமோதரன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இக்குழுவினருடன், சுற்றுலா துறை அமைச்சர் செந்தூர் பாண்டியன், கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஸ்ரீதர், உள்ளாட்சி துறை முதன்மை செயலாளர் சங்கர், வருவாய்த் துறை அரசு முதன்மை செயலாளர் ராஜிவ் ரஞ்சன், வேளாண்மைத் துறை அரசு செயலாளர் சந்தீப் சக்சேனா, மாவட்ட கலெக்டர் சமயமூர்த்தி மற்றும் அதிகாரிகள் குழுவினரும் வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட்டனர்.

கானார்பட்டி:

மாவட்டத்தில் நேற்று காலையில் நெல்லையில் இருந்து உயர் மட்ட குழுவினர் புறப்பட்டு முதலில் மானுர் அருகே கானார்பட்டி பகுதிகளில் காலை 9.30 மணிக்கு பார்வையிட்டனர். இப்பகுதியில் சுமார் 29 எக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதில் 10.20 எக்டேர் பரப்பில் நெற் பயிர் பாதிக்கப்பட்டது. இதில் விவசாயி தர்மசீலன் உட்பட 28 விவசாயிகளின் நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டன. போதுமான வருமானம் இல்லாததால் பெரிதும் கஷ்டப்பட்டு வருகிறோம். அரசு எங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் முறையிட்டனர்.

தேவர்குளம்:

தொடர்ந்து தேவர்குளம் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கா சோளம் மற்றும் உளுந்து பயிர்களை உயர் மட்ட குழுவினர் பார்வையிட்டனர். இதில் 7.97 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த மக்கா சோள பயிர் 7.21 எக்டேர் பாதிக்கப்பட்டிருந்தது. 76 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த உளுந்து பயிர் முற்றிலும் பாதிக்கப்பட்டது. இதில் சுமார்168 விவசாயிகள் நஷ்மடைந்துள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

விஜயரங்கபுரம்:

பின்னர் பந்தப்புள்ளி விஜயரங்கபுரத்திற்கு சென்ற உயர் மட்ட குழுவினர் அங்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல், மக்கா சோளம், பயறு வகை மற்றும் பருத்தி பயிர்களை பார்வையிட்டனர்.

இங்கு 69 விவசாயிகளுக்கு சொந்தமான 20.14 எக்டேர் நெல் பயிர், 542 விவசாயிகளுக்கு சொந்தமான 163 எக்டேர் மக்காச் சோள பயிர், 615 விவசாயிகளுக்கு உரிய 188 எக்டேர் பயறு வகை பயிர்கள், 207 விவசாயிகளுக்கு சொந்தமான 55 எக்டேர் பரப்பில் பருத்தி பயிர்கள் பாதிக்கப்பட்டதாக உயர் மட்ட குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், விவசாயிகள் தங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்பது தொடர்பாக கோரிக்கை மனுக்களை அமைச்சர்கள் குழுவினரிடம் அளித்தனர். விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்து விவசாயிகளுக்கு தக்க நிவாரணம் வழங்க முதல்வர் நடவடிக்கை மேற்கொள்வார் என அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இதில் மேயர் விஜிலா சத்யானந்த், டி.ஆர்.ஓ உமா மகேஸ்வரி, வீட்டு வசதி வாரிய தலைவர் முருகையா பாண்டியன், எம்.எல்.ஏக்கள் நயினார் நாகேந்திரன், சுப்பையா, ராஜேந்திரன், முத்துசெல்வி, துணை மேயர் ஜெகநாதன், பஞ்., யூனியன் தலைவர்கள் கல்லூர் வேலாயுதம், முருகையா, மண்டல தலைவர்கள் மோகன், மாதவன், ராஜன், நகராட்சி தலைவர் (பொறுப்பு) கண்ணன், சுதா பரமசிவம், கவுன்சிலர் பரணி சங்கரலிங்கம், குமார் பாண்டியன், வேளாண்மை இணை இயக்குனர் சௌந்திரராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) பாலசுப்பிமணியன், பி.ஆர்.ஓ மாரியப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நெல்லை மாவட்டத்தில் வறட்சி ஆய்வை முடித்த அமைச்சர்கள் குழுவினர் தேனி மாவட்டத்திற்கு புறப்பட்டு சென்றனர். வறட்சி பாதித்த பகுதிகளை ஆய்வு செய்து அரசுக்கு விரைவில் உயர் மட்ட குழு அறிக்கை சமர்ப்பிக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வறட்சியால் 50 சதவீதம் நெல் சாகுபடி குறைவு 16 ஆயிரம் எக்டேரில் பயிர் வகைகள் பாதிப்பு வரலாறு காணாத வறட்சியால் கடும் அவதி**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக 50 சதவீத எக்டேர் பரப்பில் நெல் சாகுபடி குறைந்துள்ளது. 16 ஆயிரம் எக்டேரில் பயிர் வகைகள் பாதிக்கப்பட்டுள்ளது.
நெல்லை மாவட்டத்தில் வழக்கமாக கார் பருவத்தில் நெல் முதல் போகம் 20 ஆயிரம் எக்டேர், 2ம்

போகத்தில் 62 ஆயிரம் எக்டேர் உட்பட 82 ஆயிரம் எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு ந்தது. ஆனால் தற்போது கடுமையான வறட்சியின் காரணமாக 41 ஆயிரத்து 967 எக்டேர் பரப்பில் மட்டுமே பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பிற வகை பயிர் சாகுபடி பரப்பும் குறைந்துள்ளன.

தற்போது 2012-13ம் ஆண்டு நீண்ட வரலாற்று இடைவெளிக்கு பின்னர் மாவட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. கார் பருவத்தில் நடவு செய்ய நீர் ஆதாரம் இல்லாமல் தரிசு நிலங்களாக இருந்தது. பிசான பருவத்தில் மிகவும் குறைவான மழை பெய்ததால் நீர் ஆதாரங்கள் வறண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

மாவட்டத்தில் கடந்த ஆண்டு 86 ஆயிரத்து 441 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட நெற் பரப்பு தற்போது வறட்சியின் காரணமாக 50 சதவீதம் குறைந்து 41 ஆயிரத்து 691 எக்டேர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது.

மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக 3,563 எக்டேர் பரப்பில் நெல், 6,572 எக்டேரில் பயறு வகை பயிர்கள், 391 எக்டேரில் பருத்தி, 6,350 எக்டேரில் சிறு தானியங்கள், 5 எக்டேரில் காய்கறி, 70 எக்டேரில் பூ வகைகள், 8 எக்டேரில் கரும்பு, 2 எக்டேரில் வாழை பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மொத்தம் 38 ஆயிரத்து 246 எக்டேரில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதில் 3,563 எக்டேர் பரப்பில் பாதிக்கப்பட்டது. (9.31 சதவீதம்). மேலும், இதர பயிர்களை பொறுத்தவரை 35 ஆயிரத்து 432 எக்டேர் சாகுபடி செய்யப்பட்டதில் 13 ஆயிரத்து 401 எக்டேர் பாதிக்கப்பட்டுள்ளது. (37.82 சதவீதம்).

மாவட்டத்தில் மொத்தம் நெல் மற்றும் இதர பயிர்கள் 73 ஆயிரத்து 678 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதில் 16 ஆயிரத்து 964 எக்டேர் பரப்பில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இது மொத்தம் 46 சதவீதமாகும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சட்டசபை கூட்ட தொடரில் ஓரிரு நாட்களில் இதற்கான அறிவிப்பை முதல்வர் ஜெ., வெளியிடுவார் என தெரிகிறது.

**கொட்டை முந்திரி விளைச்சல்**

வருஷநாடு:வருஷநாடு பகுதிகளில் கொட்டைமுந்திரி விளைச்சல் தொடங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வருஷநாடு, தும்மக்குண்டு,வா

**உழவர் பெருவிழா**

சின்னமனூர்:மாவட்ட வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை, காமாட்சிபுரம் சென்டெக்ட் அறிவியல் மையம் இணைந்து நடத்திய, உழவர் பெருவிழா திறன் வளர்ப்பு பயிற்சி காமாட்சிபுரத்தில் நடந்தது. சென்டெக்ட் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். கணினி திட்ட உதவியாளர் சுருளி ஆண்டவர் வரவேற்றார்.

மாவட்ட உழவர் பயிற்சி மைய துணை இயக்குனர் திலகர் துவக்கி வைத்தார். உழவர் பெருவிழாவில் தொழில்நுட்ப மேலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், உழவர் நண்பர்களின் பங்கு குறித்து எடுத்துரைக்கப்பட்டது. செம்மை கரும்பு சாகுபடி, திருந்திய நெல் சாகுபடி, நிலையான பயறு வகைகள் சாகுபடி, மண் மாதிரி எடுத்தல் குறித்து பயிற்சியளித்தனர். திட்ட உதவியாளர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**12.04.2013 A.M**

---

**தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி**

பள்ளிப்பட்டு, : தமிழக அரசினால் தேர்வு செய்யப்பட்ட தோட்டக்கலை கிராமம் மயிலார்வாடா ஊராட்சி செங்கட்டானூர் கிராமத்தில் ஆர்.கே.பேட்டை தோட்ட கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி நேற்று நடந்தது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்த கங்கையா தலைமை தாங்கினார். உதவி தோட்டக்கலை அலுவலர் சுப்பிரமணி அனைவரையும் வரவேற்றார். தோட்டக்கலை அலுவலர் ராமு கலந்து கொண்டு விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி தொழில்நுட்ப உத்திகள், உயர் தொழில்நுட்ப உற்பத்தி பெருக்க திட்டம், சொட்டு நீரில் காய்கறி சாகுபடி திட்டம், துல்லிய பண்ணைத் திட்டம், பெரிமெட்ரோ காய்கறி சாகுபடி திட்டம், மூங்கில் சாகுபடி திட்டம், மூலிகை பயிர் சாகுபடி திட்டம் மற்றும் அரசு மானியம் குறித்து விளக்கிப் பேசினார்.

மயிலார்வாடா ஊராட்சி தலைவர் பிச்சைமுத்து, துணைத் தலைவர் முனுசாமி, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் நெடுஞ்செழியன், சுமதி உள்பட 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தோட்டக்கலை குறித்த விவரங்களை தெரிந்துகொள்ள 94438 00953 என்ற எண்ணிலும், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் 98435 35206, 99447 84448 , 99443 27531 என்ற எண்களிலும் தொடர்பு கொண்டு விவரங்களை கேட்டறியலாம்.

**வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி 18ம் தேதி நடக்கிறது**

நாமக்கல், : நாமக்கல்லில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் 18ம் தேதி நடைபெறுகிறது. நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 18ம் தேதி காலை 10 மணிக்கு வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இந்த பயிற்சியில் கலப்பின வெள்ளாடுகள் பற்றியும், அவற்றை தேர்வு செய்யும் முறைகள், கொட் டகை அமைக்கும் முறைகள், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் தயாரிக்கும் முறை கள், தீவன மேலாண்மை, நல

மேலாண்மை, நோய் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் விற்பனைக்கான வாய்ப்புகள் குறித்து பயிற்சி அளிக்கபடுகிறது.

பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர்கள், கிராமப்புற பெண்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரை 17ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04286266345 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**உற்பத்தி குறைவால் வெற்றிலை விலை உச்சத்தை தொட்டது கோடை வெயிலால் கருகும் கொடிக்கால் வெள்ளைக்கொடி `5 ஆயிரத்துக்கு விற்பனை**

பரமத்திவேலூர், : கோடை வெயில் காரண மாக கொடிக்கால் கருகி வருவதால் வெற்றிலை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு கவுளி வெள்ளை கொடி ரக வெற்றிலை நேற்று `5 ஆயிரத்துக்கு விற்பனையானது.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா வின் பல்வேறு பகுதிகளில் வெற்றிலை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. காவிரி ஆற்றின் கரையோரம் மற்றும் ராஜவாய்க்கால் கரையோர பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகு படி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் கற்பூரி, வெள்ளைக்கொடி மற்றும் அரைக்காம்பு ரக வெற்றி லை அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த பகுதியில் விளையும் வெற்றிலைகள் பரமத்திவேலூர் தினசரி சந்தையில் ஏலம் விடப்படுகிறது. கடந்த 2 மாதமாக காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து இல்லை. இதனால் இப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட வெற்றிலை பயிர் கருகி வருகிறது. பெரும்பாலான இடங்களில் வெற்றிலை கருகிவிட்ட நிலையில், சில இடங்களில் மட்டும் தொடர்ந்து விளைகிறது. விவசாயிகள் கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள தண்ணீரின் மூலம் வெற்றிலை பயிரை காப்பாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று மாலை பரமத்திவேலூரில் வழக்கம் போல வெற்றிலை சந்தை கூடியது. கோவை, அவினாசி, ஈரோடு, மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம், புதுக்கோட்டை மற்றும் கேரளா மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் வெற்றிலையை போட்டிபோட்டு வாங்கினர். ஏலம் முறையில் வெற்றிலை கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த

வாரத்தைவிட இந்த வாரம் வெற்றிலையின் விலை கடுமையாக உயர்ந்தது.

104 கவுளி கொண்ட ஒரு கட்டு கற்பூரவள்ளி வெற்றிலை கடந்த வாரம் `1300க்கு விற்பனையானது. இந்த வாரம் `1800க்கு ஏலம் போனது. கடந்த வாரம் `3500ஆக இருந்த வெள்ளைக்கொடி இந்த வாரம் `5000மாக விலை உயர்ந்தது. இதேபோல் அரைக்கம்பு வெற்றிலையும் `1000த்தில் இருந்து `2000மாக விலை அதிகரித்தது. திடீர் விலை உயர்வு காரணமாக விவசாயிகள் மற்றும் கமிஷன் மண்டி ஏஜெண்டுகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இதுகுறித்து விவசாயி ராஜசேகர் கூறியதாவது:

தற்போது வெற்றிலையின் விலை `5 ஆயிரம் வரை உயர்ந்துள்ளது. காவரி ஆற்றில் தண்ணீர் இல்லை. கொழுத்தும் வெயிலால் பயிர்கள் கருகி, உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கிணறுகளின் தண்ணீரை மட்டுமே நம்பி சாகுபடி நடந்து வருகிறது. ஆனாலும் வெயிலின் தாக்கத்தால் வெற்றிலை பயிரை காப்பாற்றுவது கடினமாக உள்ளது. 10க்கு ஒரு பங்கு மட்டுமே தற்போது விளைச்சல் உள்ளது. 9 பங்கு பயிர் காய்ந்து, சருகாக மாறிவிட்டன. இந்த விலை உயர்வு விவசாயிகளுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

பண்டிகையால் விலை உயர்வு

கடந்த சில வாரங்களாகவே வெற்றிலை விலை அதிகரித்து வருகிறது. கோடை வெப்பத்தால் பயிர்கள் கருகி வரும் நிலையில், பங்குனிமாத கோயில் விழாக்கள் காரணமாக வெற்றிலைக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் விலை உயர்ந்துள்ளது. வரும் 14ம் தேதி தமிழ்புத்தாண்டு மற்றும் சுபமுகூர்த்த தினமாக உள்ளது. அடுத்த நாளான 15ம் தேதியும் முகூர்த்த தினம் என்பதால் வெற்றிலைக்கான தேவை அதிகரித்து, விலை உயர்ந்துள்ளது.

**பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சி பாதிப்பு குறித்து உயர்மட்டக்குழு ஆய்வு**

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளை உயர்மட்ட குழுவினர் இன்று பார்வையிடுகின்றனர்.

பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அஹமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால் பெரம்பலூர் மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அரசு அறிவித்துள்ளது. இதேபோல் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்திட தமிழக நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்

தலைமையில் அமைச்சர்கள், பல்வேறு துறை உயர் அலுவலர்கள் கொண்ட உயர்மட்டக்குழுவை அரசு அமைத்துள்ளது. தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களை தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டத்தில் இன்று (12ம் தேதி) வறட்சியால் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை உயர்மட்டக்குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்ய உள்ளனர். மேலும் இன்று மாலை வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் வறட்சியால் பயிர் விளைச்சல் பாதிப்பு குறித்து விவசாயிகளிடம் கருத்துகளை கேட்டு, கலந்துரையாட உள்ளார்கள். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**உழவர் பெருவிழாவை நடத்த சிறப்பு ஏற்பாடுகள் தயார் 14ம் தேதி துவக்கம் கலெக்டர் தகவல்**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களிலும் வரும் 14 முதல் மே 20ம் தேதி வரை உழவர் பெருவிழா நடைபெற உள்ளது.

தமிழகம் முழுவதும் உழவர் பெருவிழா ஒரு மாத காலத்திற்கு நடத்த தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார். இதையடுத்து வரும் 14 முதல் மே 20ம் தேதி வரை தஞ்சை மாவட்டத்தில் நடைபெறவுள்ள உழவர் பெருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள ஆயத்தப்பணிகள் தொடர்பாக தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

வேளாண் துறை இயக்குனர் ராஜேந்திரன் பேசுகையில்,

'தமிழக முதல்வர் விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பம் கொண்ட விவசாய முறைகள எடுத்துரைக்கவும், இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உழவர் பெருவிழா என்னும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். இப்பெருவிழாவை பயனுள்ள வகையில் நடத்தி ஒட்டுமொத்த விவசாயிகளுக்கும் விவசாய முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்க வேண்டும். வெற்றிபெற்ற விவசாயிகளை கொண்டு மற்ற விவசாயிகளுக்கு மாதிரி உதாரணங்களை எடுத்து கூற வேண்டும். விழிப்புணர்வு வாகனங்கள், செயல்முறை விளக்கங்கள் ஆகியவை மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி விவசாயிகளின் நலன் காக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்' என்றார்.

கலெக்டர் பாஸ்கரன் பேசுகையில்,

'தஞ்சை மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களிலும் உழவர் பெருவிழா வெகு சிறப்பாக நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது' என்றார்.

வேளாண் இணை இயக்குனர் முகமது யாகியா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் சொக்கலிங்கம்

(வேளாண்), துணை இயக்குனர் ராமதாஸ், கால்நடைதுறை இணை இயக்குனர் முகமது கனி (பொ) உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**நெல்லை மாவட்டத்தில் கடும் வறட்சி பருத்தி, சிறுதானியங்கள் சாகுபடி 60 சதவீதம் பாதிப்பு நிவாரண குழுவிடம் கலெக்டர் அறிக்கை**

நெல்லை, : நெல்லை மாவட்டத்தில் பருவத்திற்கு ஏற்ப மழை இல்லாததால் வறட்சியின் கோர பிடியில் சிக்கித் தவிக்கிறது. நெல் சாகுபடி பாதியாக குறைந்துள்ளதுடன், பருத்தி, சிறுதானியங்கள் 60 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளதாக வறட்சி நிவாரண குழுவிடம் கலெக் டர் சமயமூர்த்தி அறிக்கை அளித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மானூர், சங்கரன்கோவில் பகுதிகளில் தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல் வம் தலைமையில் 7 அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் நேற்று ஆய்வு நடத்தினர்.

அவர்களிடம் அளிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

நெல்லை மாவட்டத்தில் கார் பருவதŸதில் 20 ஆயிரம் ஹெக்டேரிலும், பிசான பருவத்தில் 62 ஆயிரம் ஹெக்டேரிலுமாக மொத்தம் 82 ஆயி ரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படும். 2011ம் ஆண்டு இதையும் தாண்டி 86 ஆயிரத்து 441 ஹெக் டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு வரலாறு காணாத வறட்சியாலும், பருவ காலத்திற்கு ஏற்ப மழை இல்லாததாலும் நெல்லை மாவட்டம் வறட்சியினŸ கோரபிடியில் சிக்கித் தவிக்கிறது. இதனால் நெல் சாகுபடி 50 சதவீதம் குறைந்துள்ளது. நீர் ஆதாரங்கள், அணைகள், குளங்களŸ வறண்டதால் பெருமŸபாலானபகுதி கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் நெல் அறுவடை செய்யும் போது பருவம் தவறிய மழையால் மகசூல் இழப்பு ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மானா வாரி பயிர்கள் பயிரிடும் சங்கரன்கோவில் தாலுகா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறுதானியங்கள், பருத்தி சாகுபடி 60 சதவீதமும், பயறு வகை பயிர்கள் சாகுபடி 50 சதவீதமும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே நெல்லை மாவட்டத்திற்கு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என கலெக்டர் சமயமூர்த்தி உயர் மடŸடக் குழுவிடம் அறிக்கை அளித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பயிர்கள் விவரம்

(ஹெக்டேரில்)

வ.எண் பயிர் சாகுபடி பரப்பு பாதிப்பு சதவீதம்

1) நெல் 38,246 3563.7 9.31

2) பயறு வகை 13,070 6572.78 50.28

3) பருத்தி 659 391.57 59.41

4) சிறுதானியங்கள் 10,420 6,350.88 60.94

5) காய்கறி 303 5.08 1.67

6) பூ வகைகள் 591 70.71 11.96

7) கரும்பு 2,781 8.12 0.29

8) வாழை 7,608 2.60 0.03

**மா மரங்களுக்கு இலவச காப்பீடு திட்டம் ஏக்கருக்கு ரூ25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

கிருஷ்ணகிரி, : மா மரங்களை இலவச காப்பீடு செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசஅள்ளி, நாராயண்தொட்டி மற்றும் மூக்கன்தொட்டி ஆகிய கிராமங்களில் தமிழக விவசாயிகள் சங்க கிளை துவங்க விழா மற்றும் கொடியேற்று விழா நடந்தது. இந்த விழாவில் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் ராமகவுண்டர் பங்கேற்று, கிளைகளை துவக்கி வைத்து, சங்க கொடியினை ஏற்றி வைத்து பேசினார். மேற்கு மாவட்ட தலைவர் கோணப்பன் தலைமை வகித்தார். மத்திய மாவட்ட பொருளாளர் அசோக்குமார், துணை செயலாளர் மாரியப்பன் முன்னிலை வகித்தனர். ஒன்றிய தலைவர் பசவன் வரவேற்றார்.

கூட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பாண்டில் மா மரங்களில் பூக்கள் அதிக அளவில் பூத்திருந்த நிலையில், தற்போது நிலவி வரும் கடுமையான வெயில் மற்றும் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த ஆலங்கட்டி மழையினால் மா பிஞ்சுகள் அதிக அளவில் உதிர்ந்தன. இதனால் மா விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே மற்ற பயிர்களை போல், மா மரங்களுக்கும் இலவச காப்பீடு திட்டத்தை தொடங்கி ஏக்கருக்கு ரூ25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். மா சாகுபடிக்கு சொட்டு நீர் பாசன வசதி செய்து தர வேண்டும். ஆழ்துளை கிணறு மற்றும் சோலார் முறையில் அனைத்து மாந்தோட்டங்களுக்கும் பாசன வசதி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அனைத்து சந்திப்புகளிலும் சுரங்க பாதையுடன் மேம்பாலம் அவசியம்

கூட்டத்தில் அரசு திட்டங்களுக்கு விளை நிலங்களை விவசாயிகளின் சம்மதத்தின் பேரில் மட்டுமே கையகப்படுத்த வேண்டும். அவ்வாறு கையகப்படுத்தும் நிலத்திற்கு சந்தை மதிப்பை விட கூடுதலாக 10 சதவீதம் வழங்கிட வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் அனைத்து சிறிய சந்திப்புகளிலும் சுரங்கப்பாதையுடன் கூடிய மேம்பாலம் மற்றும் சந்திப்பு வளைவுகள் ஆகியவற்றை அமைத்திட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

**கரூரில் காய்கறி, கீரை விலை கடும் உயர்வால் மக்கள் அதிர்ச்சி**

கரூர், . கடந்த 3 மாதத்திற்கு முன் வெங்காயம் விலை ரூ50ஆக இருந்தது. கடந்த மாதம் ரூ.40ஆக குறைந்தது. கரூர் உழவர்சந்தையில் நேற்று சின்னவெங்காயம் ரூ.30ஆக குறைந்தது. பல் லாரி வெங்காயம் ரூ.20ஆக குறைந்தது. உழவர்சந்தையை பொறுத்தளவில் சின்னவெங்காயத்திற்கும், பல்லாரி வெங்காயத்திற்கும் விலை ரூ.10 வித்தியாசத்தில் இருந்து வருகிறது. உழவர்சந்தையை காட்டிலும் கடைகளில் ரூ.5 அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. கடும் வறட்சிகாரணமாக இஞ்சி, பீன்ஸ், அவரைக்காய் போன்றவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. உழவர்சந்தையில் இஞ்சி கிலோ ரூ90க்கும், கடைகளில் ரூ.100க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் இஞ்சி 50 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது இரு மடங்கு உயர்ந்துள்ளது. இதேபோன்று உழவர்சந்தையில் பீன்ஸ் ரூ.70க்கும், கடைகளில் ரூ.80 என விற்பனை செய்யப்பட்டது. அவரைக்காய் ரூ.50க்கும், கடைகளில் ரூ.60, 65 என்ற விலையிலும் விற்கப்படுகிறது. வெண்டைக்காய் விலை சந்தையில் ரூ.25 எனவும், கடைகளில் ரூ.35 எனவும் விற்பனையாகிறது., கோடைக்காலம் ஆரம்பித்துவிட்டதால் எலுமிச்சை பழத்தின் விலையும் உயர்ந்துவிட்டது. ஒருபழம் ரூ.3 என சந்தையிலும், ரூ.5க்கு கடையிலும் விற்கப்படுகிறது. வறட்சியால் கீரை விளைச்சல் குறைந்து வரத்து வெகுவாக குறைந்து விட் டதால் கீரையின் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயாந்து விட்டது. கடந்த 10ஆண்டுக்கும் மேலாக உழவர்சநதைகளில் கீரை கட்டு ரூ.1, ரூ.1,50 என இருந்தது.  கடந்த சில மாதமாக கட்டு ரூ.4ஆகிவிட்டது. வெளிமார்க்கெட்டில் ரூ.10 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 15 தினங்களுக்கு முன் கிலோ 5 ரூபாய்க்கு விற்கப்பட்ட தக்காளி விலை தற்போது ரூ.15 ஆக அதிகரித்துள்ளது. காய்கறிகள் விலை உயர்வு காரணமாக ஓட்டல்களில் எலுமிச்சை, புளிசாதம், தக்காளி சாதம் போன்றவற்றின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது.

**வேலூர் மாவட்டத்தில் 18 லட்சம் விவசாயிகளுக்கு ஸ்மார்ட் கார்டு விரைவில் வழங்க ஏற்பாடு**

வேலூர், : வேலூர் மாவட்டத்தில் விவசாய குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களுக்கு 17 லட்சத்து 91 ஆயிரத்து 297 பேருக்கு விரைவில் ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட உள்ளதாக வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த திமுக ஆட்சி காலத்தில் விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு அட்டை வழங்கப்பட்டது. அதன் பின்னர் ஆட்சி மாற்றத்தால் இந்த திட்டத்தை முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

விவசாயிகளுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரணம், பேறுகாலம், விபத்து நிவாரணம் போன்ற பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் இந்த திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

மேலும் நலத்திட்ட உதவிகளை எளிதில் பெறும் வகையில் விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனியாக புதிய வடிவில் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, கடந்த ஆண்டு இதற்கான பணிகளில் வருவாய்த்துறை அதிகாரிகள் ஈடுபட்டனர். அப்போது விவசாயிகளின் பெயர், முகவரி மற்றும் அவர்களது குழந்தைகளின் பெயர்கள் ஆகியவற்றை சேகரித்தனர். அவ்வாறு சேகரிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விவசாயிகளுக்கான ஸ்மார்ட் கார்டுகளை விரைந்து வழங்க வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதைத்தொடர்ந்து ஸ்மார்ட் கார்டு அச்சிடும் பணிகள் சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் தீவிரமாக நடந்து வருகிறது.

இதுகுறித்து வருவாய்த்துறை அதிகாரிகள் கூறியதாவது:

வேலூர் மாவட்டத்தில் உள்ள எல்லா விவசாயிகளுக்கும் அவர்களது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் தனித்தனியாக ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட உள்ளது. அதன்படி வேலூர் மாவட்டத்தில் மட்டும் 17 லட்சத்து 91 ஆயிரத்து 297 விவசாயிகளின் குடும்பங்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட உள்ளது.

இதில் 18 வயது முதல் 65 வயது உடையவர்களுக்கு மெருன் கலர் ஸ்மார்ட் வழங்கப்படுகிறது. 65 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கும் 5 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கும் பழுப்பு நிறத்தில் ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும்.

இந்த ஸ்மார்ட் கார்டுகள் அனைத்தும் அச்சிடும் பணி சென்னையில் நடைபெற்று வருகிறது.

இதில் வேலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கான ஸ்மார்ட் கார்டு அச்சிடும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. பணிகள் முடிவடைந்ததும் விரைவில் விவசாயிகளுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும் என்று தெரிவித்தனர்.

### திருவாரூர் மாவட்டத்தில் 2.62 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல்

திருவாரூர், : திருவாரூர் கலெக்டர் நடராஜன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 352 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து 2 லட்சத்து 62 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது 246 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. தமிழக அரசு டெல்டா மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் 30 நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்திட திட்டமிட்டுள்ளது.

ஆதலால் திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த சுற்றுப்புற கிராமங்களில் அரசு நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலைய கட்டிடம் வேண்டுவோர், தங்களது கிராமத்தில் பாதை வசதியுடன் கூடிய தகுதியான இடத்தில் 33 செண்ட் அளவிற்கு குறைவில்லாத இடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் பெயருக்கு இனாமாக அளித்திட முன்வரும் நிலையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலம் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலைய நிரந்தர கட்டிடம் அமைத்து தரப்படும். தங்களது கிராமத்தில் அரசு நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க இனாமாக நிலம் வழங்க விருப்பமுள்ள விவசாயிகள், சம்மத கடிதம் மற்றும் உரிய ஆவணங்களுடன் திருவாரூரில் உள்ள தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக்கழக மண்டல அலுவல அலுவலகத்தினை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

**வறட்சியின் பிடியில் நெல்லை பருத்தி, சிறுதானியங்கள் சாகுபடி 60% பாதிப்பு**



நெல்லை : நெல்லை மாவட்டத்தில்  வறட்சியால் பாதிக்கப்பட்ட மானூர், சங்கரன்கோவில் பகுதிகளில் தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் 7 அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் நேற்று ஆய்வு நடத்தினர். அமைச்சர்கள் குழுவிடம் அளிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: நெல்லை மாவட்டத்தில் கார் பருவதத்தில் 20 ஆயிரம் ஹெக்டேரிலும், பிசான பருவத்தில் 62 ஆயிரம் ஹெக்டேரிலுமாக மொத்தம் 82 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படும். 2011ம் ஆண்டு இதையும் தாண்டி 86 ஆயிரத்து 441 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு வரலாறு காணாத வறட்சியாலும், பருவ காலத்திற்கு ஏற்ப மழை இல்லாததாலும் நெல்லை மாவட்டம் வறட்சியினத் கோர பிடியில் சிக்கித் தவிக்கிறது. இதனால் நெல் சாகுபடி 50 சதவீதம் குறைந்துள்ளது.

நீர் ஆதாரங்கள், அணைகள், குளங்களத் வறண்டதால் பெருமத்பாலான பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் நெல் அறுவடை செய்யும் போது பருவம் தவறிய மழையால் மகசூல் இழப்பு ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மானாவாரி பயிர்கள் பயிரிடும் சங்கரன்கோவில் தாலுகா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக சிறுதானியங்கள், பருத்தி சாகுபடி 60 சதவீதமும், பயறு வகை பயிர்கள் சாகுபடி 50 சதவீதமும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே நெல்லை மாவட்டத்திற்கு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என கலெக்டர் சமயமூர்த்தி உயர் மடத்டக் குழுவிடம் அறிக்கை அளித்துள் ளார்.

2 மணி நேரத்தில் 3 இடங்களில் ஆய்வு

நெல்லை மாவட்டத்தில் நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் 7 அமைச்சர்கள் அடங்கிய குழுவினர், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வறட்சி நிவாரண பணிகளை பார்வையிட்டனர். காலை 9.30 மணிக்கு மானூர் அருகே கானார்பட்டி, தேவர்குளம், சங்கரன்கோவில்¢ அருகே விஜயரெங்கபுரம் ஆகிய இடங்களில் மட்டுமே ஆய்வு செய்தனர். காலை 11.15 மணிக்கு அமைச்சர்கள், அதிகாரிகள் குழுவினர் ஆய்வை முடித்து கொண்டு தேனி மாவட்டம் புறப்பட்டுச் சென்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

2.04.2013 A.M

## தர்மபுரி மாவட்டத்தில், இன்று வறட்சி பாதித்த பகுதிகளில் நிதி அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் ஆய்வு

தர்மபுரி,

தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் இன்று(வெள்ளிக்கிழமை)நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்துகிறார்கள். இதுதொடர்பாக தர்மபுரி மாவட்ட கலெக்டர் ஆர்.லில்லி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

உயர்மட்டக்குழுவினர் ஆய்வு

தமிழக நிதித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர்களை உள்ளடக்கிய உயர்மட்ட குழுவினர் தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி பாதிப்பு குறித்து ஆய்வு நடத்துவதற்காக இன்று(வெள்ளிக்கிழமை) வருகை தருகிறார்கள். இந்த குழுவினர் தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி மற்றும் காரிமங்கலம் ஒன்றியங்களில் வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு நடத்துகிறார்கள்.

இந்த உயர்மட்ட குழுவில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் நத்தம் ஆர்.விஸ்வநாதன், நகராட்சி நிர்வாகம், ஊரகவளர்ச்சித்துறை, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கே.பி.முனுசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம், வேளாண்மைத்துறை அமைச்சர் செ.தாமோதரன், வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், உயர்கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அதிகாரிகள்

இந்த உயர்மட்டக்குழு ஆய்வில் அரசு கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த்துறை முதன்மை செயலர், ஊரக வளர்ச்சித்துறை முதன்மை செயலர், வேளாண்மைத்துறை முதன்மை செயலர், தோட்டக்கலைத்துறை ஆணையர் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகள் பங்கேற்கிறார்கள். வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட உள்ள உயர்மட்ட குழுவினருடன் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறார்கள். இவ்வாறு கலெக்டர் ஆர். லில்லி தெரிவித்து உள்ளார்.

**மாற்று விவசாயத்தில் ஈடுபட்டு அதிக வருவாய் பெறலாம் கலெக்டர் நடராசன் பேச்சு**

வலங்கைமான்,

மாற்று விவசாயத்தில் ஈடுபட்டு அதிக வருவாய் ஈட்டலாம் என்று கலெக் டர் நடராசன் கூறினார்.

குறை கேட்கும் முகாம்

வலங்கைமான் அருகே உள்ள சந்திரசேகரபுரம் கிரா மத்தில் மக்கள் குறை கேட்கும் முகாம் நடைபெற்றது. முகா மிற்கு கலெக்டர் நடராசன் தலைமை தாங்கினார். ஒன்றி யக்குழு தலைவர் பரமேஸ்வரி ராஜமாணிக்கம், நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மேலாளர் அழகர்சாமி, ஊராட்சி மன்றத் தலைவர் கீதா ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன் னதாக உதவி கலெக்டர் பொன்னம்மாள் வரவேற்று பேசினார்.

முகாமில்450 பேருக்கு ரூ. 20 லட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. உதவித்தொகைகளை
கலெக் டர் நடராசன் வழங்கி பேசியதாவது:–

கருவேப்பிலை சாகுபடி

அரசின் அனைத்து திட்டங் களும் உடனடியாக சென்ற டைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் மாவட்ட நிர்வா கம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட் டம் முற்றிலும் விவசாயம் சார்ந்த மாவட்டம் ஆகும். விவசாயத்தை நம்பி வாழ்கின்ற நாம் முதலில் நமது ஊரை மதித்து நடப்பது முதல் கடமையாகும்.

மேற்கு மாவட்டங்களில் சாதாரணமாக கருவேப்பிலை பயிரிடும் விவசாயிகள் பெரு மளவில் வருமானத்தை ஈட்டி வருகின்றனர். திருவாரூர் மாவட்டம் பெரும்பாலும் ஆற்றுபடுகை மண் நிறைந்த நிலத்தடி நீர் நிறைந்த மண் வளம் மிக்க பகுதியாகும். இதில் பல்வேறு பணப்பயிர் சாகுபடி உள்ளிட்ட தோட்டக் கலை பயிர்களான உயர்ரக மா, தென்னை கன்றுகள் பயி ரிட வேண்டும்.

<u>சிவப்பு சந்தன மரக்கன்று</u>

மேலும் லட்சக்கணக்கில் வருமானத்தை தரும் சிவப்பு சந்தன மரக்கன்றுகளை விவ சாயிகள் அதிகளவில் நட முன் வர வேண்டும். ஒரே வேளாண் மையை மட்டும் நம்பி இருக் காமல் மாற்று விவசாய முறைகளை பின்பற்றி அதிக வருவாய் ஈட்டலாம். இவ்வாறு அவர் கூறினார்.

முகாமில் மாவட்ட அளவி லும், வட்டார அளவிலும் அர சின் வருவாய் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பயனாளிகள் கலந்து கொண்டனர். முடிவில் தாசில் தார் சுகுமாறன் நன்றி கூறி னார்.

**தமிழக முதல்–அமைச்சர் 2–ம் பசுமை புரட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார் வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் பேச்சு**

நாகப்பட்டினம்,

தமிழக முதல்–அமைச்சர் 2–ம் பசுமை புரட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார் என வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் கூறினார்.

## ஆலோசனை கூட்டம்

நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று உழவர் பெருவிழா தொடர்பான வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் முனுசாமி முன்னிலை வகித்தார். வேளாண்மை இயக்குனர் மு.ராஜேந்திரன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

தமிழக முதல்–அமைச்சர் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

## உழவர் பெருவிழா

வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகம் உள்ளிட்ட துறைகளின் மூலம் சித்திரை 1–ந்தேதி முதல் வைகாசி 6–ந்தேதி வரை 30 நாட்கள் அனைத்து வருவாய் கிராமங்களுக்கு நேரில் சென்று அதிக மகசூல் மற்றும் அதிக வருவாய் ஈட்டுவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உழவர் பெருவிழா நடத்திட உத்தரவிட்டுள்ளார். இந்த உழவர் பெருவிழா குஜராத் மாநிலத்தில் ஒருநாள் மட்டும் நடைபெறுகிறது. தமிழகத்தில் தான் 30 நாட்கள் நடத்தப்படுகிறது. வேறு எந்த மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தவில்லை.

## திட்டங்கள்

கடந்த ஆண்டு உழவர் திருவிழா நாகை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது. இருப்பினும், கடந்த ஆண்டு இயற்கை மாற்றத்தின் காரணமாக நாகை மாவட்டத்தில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதால், சம்பா பயிரை காப்பாற்றிட தமிழக முதல்–அமைச்சர் சிறப்பு சம்பா தொகுப்பு திட்டத்தின் கீழ், நிலத்தடி நீர் அதிகம் உள்ள பகுதிகளில் சமுதாய நாற்றங்கால் மற்றும் நேரடி நெல் விதைப்பு உள்ளிட்ட திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்பட்ட போதிலும், 2012–ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு பிறகு இயல்பாக பெய்ய வேண்டிய மழை பெய்யாத காரணத்தினால், சம்பா பயிரை காப்பாற்றும் வகையில், வறட்சியை தாங்கும் வகையில், தெளிப்பு நீர் பாசனம், மும்முனை மின்சாரம், சுருள் பைப்புகள், 30 அடி நீளம் கொண்ட பிளாஸ்டிக் பைப்புகள், பிரிமிய தொகையை அரசே செலுத்தும் பயிர் காப்பீடு உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தினார்.

விழிப்புணர்வு

இயற்கை மாற்றத்திற்கேற்ப விவசாயிகளுக்கு அனைத்து விதமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் இந்த ஆண்டு உழவர் பெருவிழாவில் தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் உழவர் பெருவிழா நடைபெறும் சமயம் நவீன தொழில்நுட்ப கருவிகளை கையாளுவது உள்ளிட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

விவசாயத்திற்கு ஆள்பற்றாக்குறை காணப்படுவதால் தொழில்நுட்ப கருவிகளை போதிய அளவில் வைத்திருக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள 523 வருவாய் கிராமங்களில் ஒரு வருவாய் கிராமத்திற்கு 100 மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். நாகை மாவட்டத்தில் வேளாண்மைத்துறையில் அனைத்து பணியிடங்களும் நிரப்பிட தமிழக முதல்–அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில் காலியாக இருந்த 11 வேளாண் அலுவலர்கள் நிரப்பப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய நாகை மாவட்டத்தை சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கலந்து கொண்டவர்கள்

கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் பிரித்விராஜ், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் கணேசன், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகம் துணை இயக்குனர் சுந்தர், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் தசரதராமன், வேளாண்மை உதவி இயக்குனர்கள், வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள், ஆத்மா திட்ட தொழில் நுட்ப அலுவலர்கள், உதவியாளர்கள் மற்றும் விவசாயிகள்

கலந்து கொண்டனர். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வேளாண்மை இணை இயக்குனர் உ.ராஜேந்திரன் செய்திருந்தார்.

**கருகி நிற்கும் நெற்பயிர்களை காப்பாற்ற பிளவக்கல் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் மாவட்ட நிர்வாகத்துக்கு விவசாயிகள் கோரிக்கை**

விருதுநகர்,

வத்திராயிருப்பு பகுதியில் கருகி நிற்கும் நெற்பயிர் களைக் காப்பாற்றஉடன டியாக பிளவக்கல்அணை யில் இருந்து தண்ணீர் திறந்து விட மாவட்ட நிர்வாகம் உத்தரவிட வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>நெல் சாகுபடி</u>

வத்திராயிருப்பு பகுதியில் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் கண்மாய் பாசனம் மூலம் நெல் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. தற்போது கோடையில் மழை ஏதும் பெய்யாத நிலையில், கண்மாய் களும் வறண்டு போய் விட்ட தால் நெற்பயிர்கள் கருகி நிற் கின்றன. இவற்றை காப்பாற்ற தண்ணீரின்றி விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

<u>பிளவக்கல் அணை</u>

கிணற்றுப் பாசனத்தை நம்பி உள்ள விவசாயிகளும் கிணறுகளிலும் தண்ணீர் வறண்டு போய் விட்டதால் நெற்பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச முடிய வில்லை. உட னடியாக நெற்பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு பிள வக்கல் அணை தண்ணீர் தான் கைகொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க் கின்றனர். ஆனால் பிளவக்கல் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவதற்கான அறிகுறி ஏதும் இல்லை. இது பற்றி விவசாயிகளும், பொதுப் பணித்துறை அதிகாரிகளைச் சந்தித்து பிளவக்கல் அணை யில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று வலியு றுத்தினர். திறந்து விடும் தண் ணீரை பகிர்ந்து பயன்படுத்திக் கொள்வதாக அவர்கள் பொதுப்பணித்துறை அதிகாரி களிடம் எழுத்து மூலமும் தெரிவித்து விட்டனர். ஆனா லும் அதிகாரிகள் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடு வதற்கு எந்தவித நடவடிக்கை யும் எடுத்ததாக தெரிய வில்லை.

தவிப்பு

இதனால் வத்திராயிருப்பு பகுதியில் நெல் சாகுபடி செய்து உள்ள விவசாயிகள் பெரும் தவிப்புக்குள்ளாகி வரு கின்றனர். கருகி நிற்கும் பயிர் களுக்கு ஓரிரு நாட்களில் தண்ணீர் பாய்ச்சா விட்டால் பயிர்கள் முற்றிலுமாக கருகி எந்த பயனும் இல்லாமல் போய் விடும் என்றும், இத னால் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும் விவசாயிகள் அஞ்சுகின்றனர். மாவட்டத் தின் மேற்குப் பகுதியில் வத் திராயிருப்பில்தான் நெல் சாகுபடி அதிகம் செய்யப்படு கிறது.

கோரிக்கை

எனவே மாவட்ட நிர்வாகம் பிளவக்கல் அணையில் இருந்து கருகி நிற்கும் நெற்பயிர் களை காப்பாற்ற உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண் டும் என்று கோரப்பட்டுள் ளது. அந்தப்பகுதி விவசாயி களும் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரை முடிந்த அளவுக்கு அனைவரும் பகிர்ந்து கொள்ள முடிவு செய்து உள்ளனர். எனவே விவசாயிகளின் நலன் கருதியும், பயிர்களை காப்பாற் றவும் பிளவக்கல் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடு வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேசிய பேரிடர் மேலாண்மை நிதியில் இருந்து நிவாரணம் வழங்க வேண்டும் விவசாய சங்க மாநில பொதுச்செயலாளர் வலியுறுத்தல்**

சிவகங்கை,

தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு தேசிய பேரிடர் மேலாண்மை நிதியில் இருந்து நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாய சங்க மாநில பொதுச் செயலாளர் சண்முகம் வலியுறுத்தி பேசினார்.

மாவட்டஅளவிலான கூட்டம்

அகில இந்திய விவசயிகள் சங்க மாநாடு கடலூரில் வரு கிற ஜூலை மாதம் நடைபெற உள்ளது. இதையொட்டி சிவ கங்கை மாவட்ட அளவிலான கூட்டம் மாவட்ட தலைவர் மாணிக்கம் தலைமையில் சிவ கங்கையில் நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் சண்முகம், நகராட்சி தலைவர் அர்ச் சுனன், மாவட்ட செய லா ளர் ஆதிமூலம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட

செயலாளர் கந்தசாமி, மாவட்ட பொருளாளர் வீர பாண்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாநாட்டையொட்டி 150 பேர் கொண்ட வரவேற்பு குழு அமைக்கப்பட்டது. பின்னர் மாநில பொதுச்செயலாளர் சண் முகம் நிருபர்களிடம் கூறிய தாவது:–

நிவாரணம்

கடலூரில் நடைபெற உள்ள மாநாட்டில் உணவு பாதுகாப்பு சட்டத்தில் உள்ள பாதிப்புகள், தேசிய நீர்கொள்கையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் ஆய்வுநடத்தப்பட உள்ளது. சென்னையை தவிர தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக் கப்பட்ட மாவட்டங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதி மக் களுக்கு மத்திய அரசின் தேசிய பேரிடர்மேலாண்மை நிதியில் இருந்து நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**தேனி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள் குழுவினர் நேரில் ஆய்வு**

தேனி,

தேனி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையி லான அமைச்சர்கள் குழுவினர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வறட்சி பாதிப்பு

தமிழகத்தில் கடந்த ஆண்டு காலம் கடத்திச் சென்ற தென் மேற்கு பருவமழை பொய்த் துப்போனது. அதன்பிறகு வடகிழக்கு பருவமழையும் போதிய அளவில் பெய்யாமல் ஏமாற்றியது. பருவமழைகள் ஏமாற்றியதால் தமிழகத்தில் பச்சை பசேல் என காணப்படும் வயல்வெளிகள் எல்லாம் வறட்சியில் சிக்கி தரிசு நிலங் களாக காட்சி அளித்தன. இதனால் விவசாய பொருட் கள் உற்பத்தி பெரும் பாதிப்பை சந்தித்து உள்ளது. தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ள கடும் வறட்சிக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதனை கருத்தில் கொண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து நிவாரணம் வழங்க தமிழக அரசு முடிவு செய்தது. இதற் காக தமிழக அமைச்சர்கள் மற்றும் உயர்

அதிகாரிகளை கொண்ட ‘உயர்மட்டக்குழு’ அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவினர் மாவட்டம் தோறும் சென்று வறட்சிப் பகுதிகளை நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்து வருகின்ற னர்.

<u>அமைச்சர்கள் ஆய்வு</u>

தேனி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட இந்த உயர்மட்டக்குழுவினர் நேற்று வந்தனர். தமிழக நிதி அமைச் சர் ஓ.பன்னீர்செல்வம் தலை மையிலான இந்த குழுவில், மின்சாரத்துறை அமைச்சர் நத்தம் விசுவநாதன், உள்ளாட்சித்துறை அமைச்சர் கே.பி.முனுசாமி, வீட்டுவசதித் துறை அமைச்சர் ஆர்.வைத்திய லிங்கம், வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன், வருவாய்த்துறை அமைச்சர் தோப்பூர் என்.டி.வெங்கடா சலம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

தமிழக கூடுதல் தலைமை செயலாளரும், வருவாய்த் துறை ஆணையரு மான ஸ்ரீதர், வருவாய்த்துறை செயலாளர் ராஜீவ் ரஞ்சன், வேளாண்மைத் துறை செய லாளர் சந்தீப் சக்சேனா, ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் சி.பி.சங்கர் ஆகிய உயர் அதிகாரிகளும் இந்த குழுவில் இடம் பெற்று இருந்தனர்.

<u>வறண்ட வைகை ஆறு</u>

தேனி மாவட்டம் ஆண்டிப் பட்டி அருகே கண்டமனூரில் வைகை ஆற்றின் கரையோர பகுதிகளில் சோளம் சாகுபடி செய்த வயல்வெளிகளை உயர் மட்டக்குழுவினர் நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது, 2011–ம் ஆண்டு வைகை ஆற்றில் 115 நாட்கள் நீர் வரத்து இருந்தது என்றும், கடந்த ஆண்டு 57 நாட்கள் மட்டுமே நீர்வரத்து இருந்தது என்றும் வேளாண் மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து தண்ணீர் இன்றி வறண்டு மணல் பரப்பாக காணப்பட்ட வைகை ஆற்றை அமைச்சர்கள் குழு வினர் பார்வையிட்ட னர். அதன்பிறகு தேனி தாலுகா விற்கு உட்பட்ட ஜங்கால் பட்டி, பூமலைக்குண்டு பகுதிகளில் வறட்சியின் பிடி யில் சிக்கி, பாதிப்புகளை சந்தித்த பருத்தி சாகுபடி வயல் களை அமைச் சர்கள் பார்வை யிட்டனர். ஜங்கால்பட்டியில் மொத்தம் உள்ள 732 ஹெக் டேர் விவசாய நிலங்களில் 197 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு இருந்தது. இதில் 101.45 ஹெக்டேர் பரப் பளவில் பருத்தி பயிர் வறட்சி

யின் பிடியில் சிக்கி உள்ளதால் 153 விவசாயிகள் பாதிக்கப் பட்டு உள்ளதாக வேளாண் மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளிடம் குறைகேட்பு

இதையடுத்து ஜங்கால் பட்டியில் பருத்தி சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட விவ சாயி ரெங்கம்மாள் என்பவரை அழைத்து அமைச்சர்கள் குழு வினர் வறட்சி குறித்து விசாரித் தனர். அப்போது அந்த விவசாயி, 'நான் ரூ.60 ஆயிரம் செலவில் 3 ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்தேன். ஆனால் 25 கிலோ பருத்தி கூட விளைச்சல் அடைய வில்லை. விளைச்சல் அடை யும் நேரத்தில் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகி விட்டது' என்று தெரிவித்தார். பாதிக் கப்பட்டவர்களுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்கும் என்று அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தெரி வித்தார்.

பின்னர் சின்னமனூர் அருகே கீழபூலானந்தபுரம் பகுதியில் வறட்சியில் சிக்கிய வாழை மரங்களையும், தேவ தானப்பட்டியில் வறட்சியால் கருகிய தென்னை மரங்களை யும் அமைச்சர்கள் குழுவினர் ஆய்வு செய்தனர். தேவதானப் பட்டி பகுதியில் 284.52 ஹெக்டேர் பரப்பளவில் சாகு படி செய்யப் பட்ட தென்னை மரங்களில், 0.34 ஹெக்டேர் பரப்பளவில் மரங்கள் வறட்சியால் கருகி உள்ளதாக அமைச்சர்கள் குழுவிடம் தேனி மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

வறட்சி விவரம் சேகரிப்பு

தேனி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளையும் ஆய்வு செய்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களின் மொத்த பரப்பளவு மற்றும் பாதிப்பு விவரங்களை கணக் கிட்டு அறிக்கை அளிக் குமாறு வேளாண்மைத்துறை அதிகாரி களுக்கு அமைச் சர்கள் உத்தர விட்டனர். மேலும் வறட்சி யால் பாதிக்கப் பட்ட விவசாயி கள் அனை வருக்கும் தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா நிவாரணம் வழங்கி அறிவிப்பு செய்வார் என்று அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது, தேனி மாவட்ட கலெக்டர் கே.எஸ். பழனிசாமி, ஆண்டிப் பட்டி சட்டமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் சிவக் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் விஜயா ராணி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம்,

கலெக்டரின் நேர்முக உதவி யாளர் (வேளாண்மை) முத்தையா, மாவட்ட தோட் டக்கலை துணை இயக்குனர் முருகன், பெரியகுளம் வேளாண்மை உதவி இயக் குனர் பெரியசாமி, நகரசபை தலைவர்கள் தேனி முருகேசன், சின்னமனூர் சுரேஷ், ஒன்றியக் குழு தலை வர்கள் க.மயிலாடும் பாறை முருக்கோடை ராமர், பெரிய குளம் செல்லமுத்து, உத்தம பாளையம் தீபாவளி ராஜ், மாவட்ட அ.தி.மு.க. இளைஞர் மற்றும் இளம்பெண் கள் பாசறை செயலாளர் ஓ.ப. ரவீந் திர நாத்குமார் மற்றும் அரசின் பல்வேறுத்துறை அதி காரிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள் பலர் உடன் சென்றனர்.

**உழவர் பெருவிழா முன்னேற்பாடு ஆய்வு கூட்டம் தோட்டக்கலைத் துறை ஆணையர் தலைமையில் நடந்தது**

கரூர்

கரூர் மாவட்ட உழவர் பெருவிழா 2013 முன்னேற்பாடுகள் குறித்து தோட்டக் கலைத் துறை ஆணையர் சத்திய பிரதா சாகு தலைமையில் ஆய்வு கூட்டம் நடந்தது

**உழவர் பெருவிழா**

தமிழ் நாட்டில் 201314ம் ஆண்டில் உழவர் பெருவிழா மிகச்சிறப்பான முறையில் நடத்திட தமிழக அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் உள்ள 203 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது.

தமிழக புத்தாண்டான ஏப்ரல் 14ந் தேதி உழவர் பெருவிழா தொடங்கப்பட்டு ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நீங்கலாக மற்றும் அனைத்து நாட்களிலும் நடத்தப்பட்டு மே17ந் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

உழவர் பெருவிழாவின் மூலமாக 2ம் பசுமைப் புரட்சியை அடைந்திட அரசு முன்னோடி திட்டங்களை சகோதரத்துறையின் ஒத்துழைப்போடு உடன் அனைத்து விவசாயிகளும் பயன் அடையும் வகையில் உழவர் பெருவிழா நடத்தப் படும்.

**சிறு கண்காட்சிகள்**

உழவர் பெருவிழா நடை பெறும் வருவாய் கிராமங்களில் வேளாண்மை மற்றும் சகோதரத்துறையின் மூலம் சிறு கண்காட்சிகள் அமைக்கப் படும். மேலும், தொழில் நுட்ப கருத்து செயல் விளக்கங்கள், இடுபொருட்கள் விநியோகம் ஆகியவையும் உழவர் பெருவிழாவில் இடம் பெறும்.

**அறுசுவை உணவு**

உழவர் பெருவிழாவில் கலந்து கொள்ளும் விவசாயி களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படும். வேளாண் மற்றும் வேளாண்மை சேர்ந்த தொழில் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் தினந்தோறும் நடத்தப்படும்.

இது சம்பந்தமான வேளாண்மை மற்றும் வேளாண்மை துறையை சேர்ந்த இதர சகோதர துறை அலுவலர்களுக்கான சிறப்பு கூட்டம் கடந்த 9.4.2013ந் தேதி மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது.

இதில் வட்டார வாரியான பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். கண்காட்சி நடத்துதல், இடுபொருட்கள் வழங்குதல், பயனாளிகள் தேர்வு செய்தல் ஆகியவை சம்பந்தமாக அறிவுரை வழங்கப்பட்டது.

**ஆய்வு**

இதன் தொடர்ச்சியாக 10.4.2013 அன்று உழவர் பெருவிழா கரூர் மாவட்ட மண்டல அலுவலரான சென்னையை சேர்ந்த தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்திய பிரதா சாகு கரூர் மாவட்ட உழவர் பெருவிழா முன்னேற்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு நடத்தினார்.

இந்த ஆய்வின்போது கரூர் மாவட்டத்தில் உழவர் பெருவிழா சிறப்பாக நடத்திட எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் குறித்து மாவட்ட கலெக்டர் ஜெயந்தி விரிவாக எடுத்து கூறியதோடு அனைத்துத் துறை ஒத்துழைப் போடு உழவர் பெருவிழா 2013ஐ மிகச் சிறப்பாக நடத்துவது என தெரிவித் தார்.

வேளாண்மை இணை இயக்குநர் கரூர் மு.தெய் வேந்திரன், உழவர் பெரு விழாவை நடத்துவதற் குரிய வழிமுறைகள் போன்ற வற்றை அனைத்துத் துறை அலுவலர் களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

**கலந்து கொண்டவர்கள்**

கரூர் மாவட்ட உழவர் பெருவிழா முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, விதைச்சான்றுத் துறை, கூட்டுறவுத் துறை போன்ற துறையை சேர்ந்த அலுவலர் களும் மற்றும் களப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.